தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விலையில்லாத கறவைப் பசுக்கள் திட்டம்: ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!



**சென்னை,**

கிராமப்புறங்களின் பொருளாதாரத்தையும் நகர்ப்புறங்களில் பால் உற்பத்திக்கான தேவையையும் ஒருசேர பூர்த்தி செய்திருக்கிறது ஒரு திட்டம். இப்படி கிராமப்புறத்தையும் நகர்ப்புறத்தையும் இணைக்கும் பாலமாக விளங்கி வரும் அந்தத் திட்டம், முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசின் விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம்தான்.

இந்தத் திட்டம் கடந்த 2011-ஆம் ஆண்டு முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்டது. இப்போது இந்த விலையில்லாத கறவைப் பசுக்கள் மற்றும் ஆடுகளைப் பெற்று பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை பல லட்சங்களைத் தாண்டி விட்டது.

31 மாவட்டங்களில் ரூ.506.36 கோடி செலவில் 4 லட்சம் பயனாளிகளுக்கு தலா நான்கு வெள்ளாடுகள் அல்லது செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த ஆடுகள் 11.57 லட்சம் குட்டிகளை ஈன்றுள்ளன. இதேபோன்று, 21 மாவட்டங்களில் 36 ஆயிரம் பயனாளிகளுக்கு விலையில்லாத கறவைப் பசுக்கள் அளிக்கப்பட்டுள்ளன. அந்தப் பசுக்கள் 13 ஆயிரத்து 326 கன்றுகளை ஈன்றுள்ளன.

ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் 60 ஆயிரம் பயனாளிகளுக்கு விலையில்லாத கறவைப் பசுக்கள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**சிறப்பான செயலாக்கம்:** விலையில்லாத கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் ஒவ்வொரு அம்சமும் மிகவும் கவனமாக மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக, பயனாளிகள் தேர்வு போன்ற விஷயங்களில் மிகவும் கவனம் எடுத்துக் கொள்ளப்பட்டது. பால் உற்பத்தியும், பால் கூட்டுறவுச் சங்கங்களும் குறைவாக உள்ள 21 மாவட்டங்களில் விலையில்லாத கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட காலத்தில், தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் இல்லாத கிராமங்களில் கறவைப் பசுக்கள் விநியோகம் செய்யப்பட்டன. இந்த விநியோகத்துக்குப் பிறகு அத்தகைய கிராம ஊராட்சிகளில் தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்படுகின்றன.

முதல் மற்றும் இரண்டாவது ஈற்றில் உள்ள 5 வயதுக்குள்பட்ட கறவைப் பசுக்கள் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. குடும்பத்தில் உள்ள பெண்களே பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தகுதியுள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒன்று என்ற வீதத்தில், கறவைப் பசுக்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. பசுக்கள் மாநிலத்துக்கு வெளியே இருந்து மட்டுமே, அதுவும் பயனாளிகளாலேயே கொள்முதல் செய்யப்படுகின்றன. ஒரு பயனாளிக்கு ஒரு பசு கொள்முதல் செய்யும் வகையில், ரூ.30 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சில பொதுவான விதிகள் வரையறை:** விலையில்லாத கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளை அந்தந்த கிராம சபைகளே தேர்ந்தெடுக்கின்றன. மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

பயனாளிகள், அந்தந்த கிராம ஊராட்சிகளில் நிரந்தரமாக வசிப்பவராகவும், 60 வயதுக்கு குறைவானவராகவும் இருக்கவும், 30 சதவீதத்தினர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்தவராகவும் இருக்க வேண்டும் என விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

விலையில்லாத வெள்ளாடுகள் அல்லது செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், ஏழ்மை நிலையிலுள்ள நிலமில்லாத ஏழு லட்சம் குடும்பங்களுக்கு தலா 4 வெள்ளாடுகள் அல்லது செம்மறியாடுகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதில், கடந்த 2 ஆண்டுகளில் 2.5 லட்சம் பேருக்கு 10 லட்சம் ஆடுகள் வரை வழங்கப்பட்டுள்ளன. ஒரு ஆட்டுக்கு ரூ.2,500 வீதம் 4 ஆடுகளுக்கு மொத்தம் ரூ.10 ஆயிரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கொட்டகை கட்டுதல், ஊட்டச்சத்து வழங்குதல் ஆகியவற்றுக்காக ஆட்டுக்கு ரூ.500 என மொத்தமாக ரூ.2 ஆயிரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**எய்திய சாதனைகள்-பலன்கள்:** விலையில்லாத கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் அல்லது செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தால் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் எண்ணற்ற பயன்கள் எய்தப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் பொருளாதார வளம் பெருகியிருப்பதாக அந்தத் திட்டத்தின் பயனாளிகளே தெரிவிக்கிறார்கள்.

மேலும், விலையில்லாத கறவைப் பசுக்களால் ஆவின் மூலம் கொள்முதல் செய்யப்படும் பாலின் அளவும் உயர்ந்திருப்பதாக அதன் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, கடந்த 2010-11-ஆம் நிதியாண்டில் 20.67 லட்சமாக இருந்த பால் கொள்முதல் அளவு, கடந்த 2012-13-ஆம் நிதியாண்டில் 24.36 லட்சமாக உயர்ந்துள்ளது. இந்த அளவுக்கு பால் கொள்முதல் உயர்ந்ததற்கு முக்கிய காரணமாக, விலையில்லாத கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம் என்றே சொல்லப்படுகிறது.

பால் உற்பத்தியும், பால் கூட்டுறவுச் சங்கங்களும் குறைவாக உள்ள மாவட்டங்களில் விலையில்லாத கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டன.

இதனால், அந்த மாவட்டங்களில் பால் உற்பத்தி பெருகி, அவை ஆவின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டதால், நகர்ப்புற மக்கள் பயன்படுத்தும் பாலின் தேவை சமாளிக்கப்பட்டுள்ளது என்கிறார்கள் ஆவின் நிர்வாகத்தினர்.

**மீன்பிடி தடைக்கால நிவாரண தொகை: ரூ.33 கோடி நிதி ஒதுக்கி அரசு உத்தரவு**

**சென்னை,**

மீன்பிடி தடைக்கால நிவாரண தொகை வழங்குவதற்காக ரூ.33 கோடி நிதி ஒதுக்கி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இது குறித்து தமிழக மீன்வளத் துறை வெளியிட்டுள்ள உத்தரவு:

மீன்களின் இனப் பெருக்கத்துக்காக, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 15 முதல் மே 29 வரையில் விசைப் படகு மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை காலத்தில் மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, அவர்களுக்கு நிவராணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிவாரணத் தொகை ரூ.1000-லிருந்து ரூ.2 ஆயிரமாக அதிமுக ஆட்சிப் பொறுப்பேற்றதும் உயர்த்தப்பட்டது.

இந்த ஆண்டும் (2014) வழக்கம் போல், தடைக் காலமானது, ஏப்ரல் 15 ஆம் தேதி நடைமுறைப்பட்டது. இந்த நிலையில், தடைக் காலத்துக்கான நிவாரணத் தொகையை மீனவக் குடும்பங்களுக்கு வழங்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

எத்தனை குடும்பங்கள்? கடந்த நிதியாண்டில் தடைக் கால நிவாரணத் தொகையை ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 266 மீனவக் குடும்பங்கள் பெற்றன. ஆனால், இந்த ஆண்டு 5 சதவீத குடும்பங்கள் அதிகரித்துள்ளன.

அதன்படி, 7 ஆயிரத்து 963 குடும்பங்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ.33.49 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எப்படி வழங்கப்படும்? தமிழகத்தில் 13 கடலோர மாவட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் மீன்வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகம் மூலமாக இந்த நிவாரணத் தொகையை வழங்கும் பணி அடுத்த சில நாள்களில் தொடங்கும் என்று மீன்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12-ஆம் தேதி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுமா?**



**மேட்டூர்,**

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு ஜூன் 12-ஆம் தேதி தண்ணீர் திறந்துவிட வாய்ப்பு இல்லாததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மேட்டூர் அணை மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு, திருச்சி, தஞ்சை, திருவாரூர் உள்பட 11 காவிரி டெல்டா மாவட்டங்களில் 16.05 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. குறுவை, சம்பா, தாளடிப் பயிர்களுக்கு 330 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படும். டெல்டா மாவட்டங்களில் போதிய அளவு மழை பெய்தால் பாசனத்துக்கான தண்ணீர்த் தேவை குறையும். மேட்டூர் அணையின் நீர்மட்டம் 90 அடியாக இருக்கும்பட்சத்தில் பருவமழையை எதிர்நோக்கி, ஆண்டுதோறும் ஜூன் 12-ஆம் தேதி மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படும்.

நிகழாண்டில் ஜூன் 12-ஆம் தேதிக்கு இன்னும் மூன்று வாரங்களே உள்ள நிலையில், மேட்டூர் அணையின் தற்போதைய நீர் இருப்பு 9.79 டி.எம்.சி.யாக மட்டுமே உள்ளது. அணையில் தற்போது உள்ள நீர் மீன் வளத்தைப் பாதுகாக்கவும், குடிநீருக்கும் மட்டுமே போதுமானதாக இருக்கும். பருவமழை தொடங்கி, கர்நாடக மாநிலத்தில் உள்ள அணைகள் நிரம்பிய பிறகே உபரிநீர் தமிழகத்துக்கு திறந்து விடப்பட்டு மேட்டூர் அணைக்கு வந்து சேரும்.

எனவே, நிகழாண்டில் ஜூன் 12-ஆம் தேதிக்குள் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 90 அடியாக உயரும் வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது. இதனால், நிகழாண்டில் தண்ணீர் திறந்துவிட வேண்டிய நாளான ஜூன் 12-ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிட வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது. இதனால், காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கர்நாடக மாநில அரசு காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி தமிழகத்துக்கு உரிய நீரைத் தர மறுத்து வருவதால், தமிழக விவசாயம் பட்டுப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மத்தியில் புதிதாகப் பொறுப்பு ஏற்கும் அரசாவது காவிரி நதிநீரில் தமிழகத்தின் உரிமையை நிலை நாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே தமிழக விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது.

## மலர்க்காட்சிக்கு தயாராகும் உதகை தாவரவியல் பூங்கா



**உதகை,**

வரும் 23 முதல் 25-ஆம் தேதி வரை 3 நாட்களுக்கு நடைபெறவுள்ள பிரமாண்ட மலர்த் திருவிழாவான 118-ஆவது மலர்க்காட்சிக்கு உதகை அரசினர் தாவரவியல் பூங்கா தயாராகி வருகிறது.

கோடை சீசன் என்றாலே உதகை நினைவுக்கு வருவதைப்போல, உதகை என்றாலே முதலில் நினைவுக்கு வருவது அரசினர் தாவரவியல் பூங்காதான். இப் பூங்காவில் மே 23 முதல் 25-ஆம் தேதி வரை மலர்காட்சி நடத்தப்படுகிறது. இதை

முன்னிட்டு அரசினர் தாவரவியல் பூங்காவில் இன்கா மெரிகோல்டு, பிரெஞ்சு மெரிகோல்டு, பிளாக்ஸ், பெட்டூனியா, பேன்சி, டயான்தஸ், பிகோனியா, டேலியா, பால்சம், ரெனன்குலஸ், வயோலா, அஜிரேட்டம், கேலண்டூலா, கிளாடியோலஸ், லில்லியம், சன் பிளவர், சப்னேரியா போன்ற 3 லட்சம் மலர்ச்செடிகள் நடவு செய்யப்பட்டு பொலிவுடன் காட்சியளிக்கிறது. இதைத்தவிர 15,000 மலர் தொட்டிகளில் மலர்ச் செடிகள் நடவு செய்யப்பட்டு மலர்க்காட்சிக்கான நாட்களில் காட்சி அரங்குகளில் அடுக்கப்படும். இந்தாண்டில் 118-ஆவது மலர்க்காட்சியையொட்டி பூங்காவுக்குள் 50,000 ரோஜா மலர்களைக் கொண்டு 60 அடி நீளத்திலும், 10 அடி உயரத்திலும், 8 அடி அகலத்திலும் நீலகிரி மலை ரயிலின் மாதிரி அமைக்கப்படுகிறது.

பூங்கா நுழைவாயிலிலிருந்து 10 அடி உயரத்தில் 10 அலங்கார வளைவுகள் லில்லியம், அல்ஸ்டிரோமெரியா மலர்களால் அமைக்கப்படுகிறது. அதேபோல, நீலகிரி மாவட்டத்தின் பூர்வீகக் குடிகளான தோடரின மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் வகையில் 10 அடி நீளம், 8 அடி அகலம் கொண்ட தோடர் குடில் 6,000 ஜெர்பரா மலர்களைக் கொண்டும், தோடர் குடும்ப உறுப்பினர்களான தாத்தா, பாட்டி, இளம் தம்பதி மற்றும் குழந்தை ஆகிய உருவங்கள் காரனேசன் மலர்களைக் கொண்டும் வடிவமைக்கப்பட்டு வருகிறது.

அத்துடன், தோடரின மக்களின் வாழ்க்கைக்கு பக்கபலமாக உள்ள எருமையின் உருவம், காட்டில் கிடைக்கும் மலர்களைக் கொண்டே வடிவமைக்கப்படுகிறது. மலர்க்காட்சியின் தொடக்க விழா நடைபெறும் பகுதியில் வண்ணத்துப் பூச்சி வடிவிலான கதவுகள் மலர்களாலேயே அலங்கரிக்கப்படுகிறது. மலர்க்காட்சியை சிறப்பிக்கும் வகையில் நெதர்லாந்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 5 வண்ணங்களிலான டுலீப் மலர்களும், ஹெல்கோனியம், ஆர்கிட்ஸ் மற்றும் ஆந்தூரியம் மலர்களின் சிறப்பு பாகங்களும் சிறப்பு அரங்காக அமைக்கப்படுகிறது.

மேலும், 5 வண்ணங்களிலான லில்லியம் மலர் தொட்டிகளும் வைக்கப்படுகின்றன. பல வண்ண மலர்ச் செடிகள் கொண்ட ரங்கோலி அமைக்கப்படுவதோடு, தோட்டக் கலைத் துறை வளத்தைச் சித்தரிக்கும் வகையில் தோட்டக் கலை அரங்கு அமைக்கப்பட்டு மலர்கள், காய்கறிகள், பழங்கள் மற்றும் வாசனைத் திரவியங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் வகையில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து முக்கியக் கண்காட்சிப் பொருட்கள் கொண்டு

வரப்படுகின்றன. இவற்றைத் தவிர அரசு மற்றும் தனியார் துறைகள் சார்பில் 15 போட்டியாளர் அரங்குகளும் அமைக்கப்படுகின்றன.

மலர்க்காட்சி நடைபெறும் நாட்களில் கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் மலர்க்காட்சிக்காக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பூங்காக்களை அமைத்துள்ளவர்கள், போட்டிகளில் பங்கேற்க பதிவு செய்துள்ளனர். சிறந்த பூங்காவுக்கும், மிகச்சிறந்த பூங்காவுக்குமாக இரண்டு சுழற்கோப்பைகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தொடர் மழையால் நன்மை:கமுதி பகுதியில் கோடை விவசாயம் துவக்கம்



**கமுதி,**

கமுதி பகுதியில் தொடர் மழை காரணமாக, கோடை விவசாயத்தில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம், கமுதி பகுதி ஊர்களில் இந்த ஆண்டு, சில நாள்களுக்கு முன்பாக எதிர்பாராத வகையில் கோடை மழை தொடர்ந்து பெய்தது. 70 மி.மீ. வரையிலும் மழை பெய்திருந்தது குறிப்பிடத்தக்கது ஆகும். மழையால் சிறிய கண்மாய்கள் மற்றும் ஊரணிகளில் தண்ணீர் பெருகியது. பெரிய கண்மாயகளிலும் ஓரளவு தண்ணீர் சேர்ந்தது.

இதையடுத்து கோடை விவசாயத்தில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். டிராக்டர்கள் மற்றும் ஏர்கள் மூலம் வயல்களில் உழுது, விதைகள் விதைத்து

வருகின்றனர். கோடை பருத்தி உளுந்து உள்ளிட்ட பயறு வகைகள், எள்ளு, நிலக்கடலை, சோளம், பருத்தி போன்றவற்றை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர்.இடைப்பட்ட நாள்களில் மீண்டும் கோடை மழை பெய்தாலோ அல்லது தென்மேற்கு பருவக்காற்று மழை பெய்யத் தொடங்கினாலோ, கண்மாய்களில் தற்போது தண்ணீர் இருப்பதாலும் தங்களுக்கு கோடை விவசாய மகசூல் அதிகமாக கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் உள்ளனர்.

## வேலூரில் 106 டிகிரி வெயில்

**சென்னை,**

தமிழகத்தில் அதிகபட்சமாக வேலூரில் செவ்வாய்க்கிழமை (மே 20) 106 டிகிரி வெயில் பதிவானது.

இதே போல தருமபுரி, கரூர் பரமத்தி, மதுரை, பாளையங்கோட்டை, சேலம், திருச்சி ஆகிய இடங்களிலும் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவானது. தமிழகத்தில் கத்திரி வெயிலின் காரணமாக பல இடங்களில் கடுமையான வெயில் நிலவி வந்தது. இந்த நிலையில் அந்தமான் கடல் பகுதியில் தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளதால், தமிழகத்தில் அனல் காற்று சற்று குறைந்துள்ளது.

**செவ்வாய்க்கிழமை பதிவான வெயில் (டிகிரி பாரன்ஹீட்டில்):**

வேலூர் - 106

திருச்சி - 105

கரூர் பரமத்தி - 104

தருமபுரி - 103

சேலம், மதுரை - 102

பாளையங்கோட்டை - 101

சென்னை - 99

கோவை - 97

கொடைக்கானல் - 70

## விதை பரிசோதனை: விவசாயிகளுக்கு ஆலோசனை

**மதுரை,**

விவசாயிகள் இருப்பு வைத்துள்ள விதைகள் தரமானவையா என்பதை பரிசோதனை செய்து பயன்படுத்துமாறு வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து மதுரை நாகமலை புதுக்கோட்டை விதை பரிசோதனை நிலைய அலுவலர் வெளியிட்டுள்ள செய்தி: அறிவியல் முறையிலான விதைப் பரிசோதனையில், விதையின் முளைப்புத் திறனை அறிய முடிகிறது. மேலும் பிற பயிர் விதைகள் கலப்பு அறிவதுடன், ரகத் தூய்மை காப்பாற்றப்பட்டு மகசூலுக்கு நல்ல விலையும் கிடைப்பது சாத்தியமாகிறது.

ஆகவே, விவசாயிகள் விதைகளை விதைக்கும் முன்பு விதைப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. ஒரு விதை மாதிரிக்கு ரூ.30 பரிசோதனைக் கட்டணமாக வசூலிக்கப்படும். இதுதொடர்பான விவரங்களுக்கு மதுரை நாகமலைபுதுக்கோட்டையில் உள்ள விதை பரிசோதனை நிலையத்தை அணுகலாம் என்றார்.

## இடி, மின்னலுடன் ஆலங்கட்டி மழை

**வாடிப்பட்டி,**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு 7மணி முதல் ஒரு மணிநேரம் இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

வாடிப்பட்டி பகுதியில் தாதம்பட்டி, நீரேத்தான், குலசேரன்கோட்டை, கச்சைகட்டி, குட்லாடம்பட்டி, செம்மணிப்பட்டி, ராமையன்பட்டி, பூச்சம்பட்டி, ஆண்டிபட்டி, கட்டக்குளம், வடுகபட்டி,சோழவந்தான், காடுபட்டி உள்பட பல கிராமங்களிலும் பலத்த இடி சத்தத்துடன், ஆலங்கட்டி மழை பெய்தது.

கடந்த ஒருவாரமாக அக்னி நட்சத்திரத்தின் தாக்கம் அதிகம் இருந்த நிலையில் இந்த மழை குளுமையை அளித்துள்ளது.

## கோடை விழா மலர்க் கண்காட்சிக்கு தயாராகி வரும் பிரையண்ட் பூங்கா

**கொடைக்கானல்,**

கோடை விழாவை முன்னிட்டு, கொடைக்கானல் பிரையண்ட் பூங்கா மலர்க் கண்காட்சிக்காக தயாராகிறது.

கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் 53ஆவது மலர்க் கண்காட்சி நடைபெற உள்ளது. இதற்காக பூங்காவில் நடப்பட்ட, ரோஜா, டேலியா, குருவிப் பூ, கொக்குப் பூ, தவளை வாய், டையாந்தேஸ், ஆரனத்தி கோலம், மேரி கோல்ட், ஜெப்ரோனியா, கல் ரோஜா, ஜெனியா, ஆந்தோரியா, ஆஸ்டர்ஸ், பிங்க், ஆஸ்டர் அமலகம் உள்ளிட்ட பல்வேறு வகையான 800 வண்ண மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. நூற்றுக்கணக்கான பூச்செடிகள் மேடைகளில் வைக்கும் பணி, பந்தல் அமைக்கும் பணி, அரசு மற்றும் தனியார் துறையின் சார்பில் அமைக்கப்பட உள்ள அரங்குகள் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன. 50-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

கொடைக்கானலில் சாரல் மழை: கொடைக்கானலில் கடந்த 2 நாள்களாக பகல் நேரங்களில் மிதமான வெயிலும், மாலையில் மேகமூட்டமும், அவ்வப்போது லேசான சாரல் மழையும் நிலவி வருவதால், சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சாரல் மழையில் பூக்கள் சேதமடையாத வகையில், பூங்கா பணியாளர்கள் பராமரிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## ஆண்டிபட்டியில் முருங்கைக்காய் விளைச்சல் அமோகம்: விலை வீழ்ச்சி

**ஆண்டிபட்டி,**

முருங்கைக்காய் விளைச்சல் அதிகரித்துள்ளதால், விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

தேனி மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால், பெரும்பாலான விவசாயிகள் விவசாயத்தை விட்டு வேறு தொழிலுக்குச் செல்லும் நிலையில் உள்ளனர். மேலும், இப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவதால், கிணற்று நீர் பாசனத்தின் மூலம் விவசாயம் நடைபெற்று வருகிறது.

முருங்கையில் யாழ்பானை முருங்கை, சவகச்சேரி முருங்கை, பால் முருங்கை, பூனை முருங்கை மற்றும் குடிமியான் முருங்கை-1, பெரியகுளம் முருங்கை-1 ஆகிய பல்வேறு வகைகள் உள்ளன. இதில், நவீன ரகமான குடிமியான் மலை-1, பெரியகுளம்-1 ஆகிய ரகங்கள் பயிரிடப்படுகின்றன.

கடந்தாண்டு போதிய மழை இல்லாததால், முருங்கைக்காய் விளைச்சல் குறைந்தது. இதனால், கடந்தாண்டு மே மாதம் ஒரு காயின் விலை ரூ. 10 முதல் 15 வரை விற்பனையானது. ஆனால், தற்போது ஆண்டிபட்டி பகுதியில் போதிய மழை பெய்துள்ளதால், மகசூல் அதிகரித்துள்ளது. இதனால், காய்களின் வரத்தும் அதிகரித்து, கிலோ ரூ. 10 முதல் 15 வரை விற்கப்படும் நிலை உருவாகியுள்ளது. இந்த விலை, விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாது.

முருங்கைக் காய்க்கு போதுமான விலை கிடைக்க, சேமிப்பு நிலையம் அமைக்க வேண்டும். மேலும், முருங்கை பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இப்பகுதியில் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வரத்துக் குறைவால் மீன் விலை உயர்வு

**திருவாடானை,**

திருவாடானை தாலுகாவில் வரத்து குறைவால் மீன விலை  உயர்ந்துள்ளது.

கடந்த சில நாள்களாக வெயில் கடுமையாக  இருப்பதால் கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு மீன்பாடு கிடைப்பதில்லை.

இதனால் மீன் வரத்து குறைந்து விவை உயர்ந்துள்ளது.

திருவாடைனையில் கடந்த வாரம் ரூ.150க்கு விற்ற வெல மீன் ரூ.350க்கும், முரல் ரூ.250க்கு விற்றது ரூ.350க்கும், நண்டு ரூ.250 விற்றது ரூ.400க்கும் விற்கப்படுகிறது.

உயர்ரக மீன்கள் ரூ.350க்கு மேல் விற்கப்படுவதால் மீன் பிரியர்கள் அவதியடைந்துள்ளனர்.

**<u>காண்டூர் கால்வாய் பணிகள் இன்று துவக்கம்</u>**

**பொள்ளாச்சி,**

பிஏபி திட்டத்தின் உயிர்நாடியான காண்டூர் கால்வாய் திட்டப் பணிகள் புதன்கிழமை துவங்குகின்றன.

பிஏபி தொகுப்பு அணைகளிலிருந்து திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் கொண்டு

செல்லப்படும் காண்டூர் கால்வாய் 49.3 கி.மீ. நீளமுடையது. மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில், சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையத்தில் துவங்கும் காண்டூர் கால்வாய், அடர்ந்த வனப் பகுதி வழியாக திருமூர்த்தி அணைக்கு செல்கிறது. மரங்களின் வேர்கள் ஊடுருவியது உள்பட பல்வேறு காரணங்களால் கால்வாய் கரைகள் சேதமடைந்திருந்தன.

காண்டூர் கால்வாய் மூலமாக திருமூர்த்தி அணைக்கு அதிகபட்சமாக 1,150 கன அடி வரை தண்ணீர் கொண்டு வர முடியும். ஆனால், கால்வாய் கரைகள் சேதமடைந்திருந்ததால், 30 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை தண்ணீர் விரயம் ஏற்பட்டது.

இதனால், பிஏபி மண்டலப் பாசனத்தில் கடைமடைப் பகுதிகளுக்கு திருமூர்த்தி அணையிலிருந்து போதுமான தண்ணீர் வழங்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதையடுத்து, காண்டூர் கால்வாயை புதுப்பிக்க உலக வங்கி நிதியுதவியில் 184.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, மூன்று பிரிவுகளாக பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த 2011-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதற்கட்டப் பணிகள் துவங்கி, ஆகஸ்ட் மாதம் நிறுத்தப்பட்டன. அதன்பின், தொகுப்பு அணைகளிலிருந்து காண்டூர் கால்வாய் மூலமாக திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு இருப்பு செய்யப்பட்டது. செப்டம்பர் 3 முதல் மார்ச் 18 வரை முதல் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் வழங்கப்பட்டது. இரண்டாம் கட்ட பணியும், 3-ஆம் கட்டப் பணியும் முடிந்து திருமூர்த்தி அணைக்கு காண்டூர் கால்வாய் மூலமாகத் தண்ணீர் வழங்கப்பட்டுவந்தது. இந்நிலையில், செவ்வாய்க்கிழமை கால்வாயில் தண்ணீர் நிறுத்தப்பட்டது. புதன்கிழமை முதல் பணிகள் துவங்கப்பட்டு வரும் ஆகஸ்ட் மாதம் வரை திட்டப் பணிகள் நடைபெறும் என பொதுப்பணித் துறையினர் தெரிவித்துள்ளனர்.

**காய்கறி, பழப்பொருள்களை வணிக முறையில் தயாரிக்க 2 நாள்கள் பயிற்சி**

**கோவை,**

வணிக முறையிலான காய்கறி மற்றும் பழப்பொருள்கள் தயாரித்தல் குறித்த இரு நாள் பயிற்சி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மே 28 ஆம் தேதி தொடங்குகிறது. இதில் உலர வைக்கப்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்கள், பலவகை பழ ஜாம், பழரசம், தயார்நிலை பானம், ஊறுகாய், ஊறுகனி, பழ மிட்டாய் தயாரிப்பது குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

இப்பயிற்சியில் சேர ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,000 செலுத்தி தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். நேரில் வந்து பெயரை பதிவு செய்துகொள்ள இயலாதவர்கள் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை 641003 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். இப்பயிற்சியில் சேர பதிவு செய்துகொள்ள இறுதி நாள் மே 27 ஆம் தேதியாகும். மேலும் விவரங்களுக்கு 0422-6611340, 6611268.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 45.29 அடி**

**ஈரோடு,**

பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 45.29 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 452 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.4 டி.எம்.சி.

**118-ஆவது மலர்க்காட்சிக்கு தயாராகும் தாவரவியல் பூங்கா**

**உதகை,**

வரும் 23 முதல் 25-ஆம் தேதி வரை 3 நாட்களுக்கு நடைபெறவுள்ள பிரமாண்ட மலர்த் திருவிழாவான 118-ஆவது மலர்க்காட்சிக்கு உதகை அரசினர் தாவரவியல் பூங்கா தயாராகி வருகிறது. கோடை சீசன் என்றாலே உதகை நினைவுக்கு வருவதைப்போல, உதகை என்றாலே முதலில் நினைவுக்கு வருவது அரசினர்

தாவரவியல் பூங்காதான். இப் பூங்காவில் மே 23 முதல் 25-ஆம் தேதி வரை மலர்காட்சி நடத்தப்படுகிறது.

இதை முன்னிட்டு அரசினர் தாவரவியல் பூங்காவில் இன்கா மெரிகோல்டு, பிரெஞ்சு மெரிகோல்டு, பிளாக்ஸ், பெட்டூனியா, பேன்சி, டயான்தஸ், பிகோனியா, டேலியா, பால்சம், ரெனன்குலஸ், வயோலா, அஜிரேட்டம், கேலண்டூலா, கிளாடியோலஸ், லில்லியம், சன் பிளவர், சப்னேரியா போன்ற 3 லட்சம் மலர்ச்செடிகள் நடவு செய்யப்பட்டு பொலிவுடன் காட்சியளிக்கிறது. இதைத்தவிர 15,000 மலர் தொட்டிகளில் மலர்ச் செடிகள் நடவு செய்யப்பட்டு மலர்க்காட்சிக்கான நாட்களில் காட்சி அரங்குகளில் அடுக்கப்படும்.

இந்தாண்டில் 118-ஆவது மலர்க்காட்சியையொட்டி பூங்காவுக்குள் 50,000 ரோஜா மலர்களைக் கொண்டு 60 அடி நீளத்திலும், 10 அடி உயரத்திலும், 8 அடி அகலத்திலும் நீலகிரி மலை ரயிலின் மாதிரி அமைக்கப்படுகிறது. பூங்காவின் நுழைவாயிலிலிருந்து 10 அடி உயரத்தில் 10 அலங்கார வளைவுகள் லில்லியம், அல்ஸ்டிரோமெரியா மலர்களால் அமைக்கப்படுகிறது.

அதேபோல, நீலகிரி மாவட்டத்தின் பூர்வீகக் குடிகளான தோடரின மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் வகையில் 10 அடி நீளம், 8 அடி அகலம் கொண்ட தோடர் குடில் 6,000 ஜெர்பரா மலர்களைக் கொண்டும், தோடர் குடும்ப உறுப்பினர்களான தாத்தா, பாட்டி, இளம் தம்பதி மற்றும் குழந்தை ஆகிய உருவங்கள் காரனேசன் மலர்களைக் கொண்டும் வடிவமைக்கப்பட்டு வருகிறது. அத்துடன், தோடரின மக்களின் வாழ்க்கைக்கு பக்கபலமாக உள்ள எருமையின் உருவம், காட்டில் கிடைக்கும் மலர்களைக் கொண்டே வடிவமைக்கப்படுகிறது.

மலர்க்காட்சியின் தொடக்க விழா நடைபெறும் பகுதியில் வண்ணத்துப் பூச்சி வடிவிலான கதவுகள் மலர்களாலேயே அலங்கரிக்கப்படுகிறது. மலர்க்காட்சியை சிறப்பிக்கும் வகையில் நெதர்லாந்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 5 வண்ணங்களிலான டுலீப் மலர்களும், ஹெல்கோனியம், ஆர்கிட்ஸ் மற்றும் ஆந்தூரியம் மலர்களின் சிறப்பு பாகங்களும் சிறப்பு அரங்காக அமைக்கப்படுகிறது. அத்துடன், 5 வண்ணங்களிலான லில்லியம் மலர் தொட்டிகளும் வைக்கப்படுகின்றன. பல வண்ண மலர்ச் செடிகள் கொண்ட ரங்கோலி

அமைக்கப்படுவதோடு, தோட்டக் கலைத் துறை வளத்தைச் சித்தரிக்கும் வகையில் தோட்டக் கலை அரங்கு அமைக்கப்பட்டு மலர்கள், காய்கறிகள், பழங்கள் மற்றும்

வாசனைத் திரவியங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து முக்கியக் கண்காட்சிப் பொருட்கள் கொண்டு வரப்படுகின்றன. இவற்றைத் தவிர அரசு மற்றும் தனியார் துறைகள் சார்பில் 15 போட்டியாளர் அரங்குகளும் அமைக்கப்படுகின்றன.

மலர்க்காட்சி நடைபெறும் நாட்களில் கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் மலர்க்காட்சிக்காக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பூங்காக்களை அமைத்துள்ளவர்கள், போட்டிகளில் பங்கேற்க பதிவு செய்துள்ளனர். சிறந்த பூங்காவுக்கும், மிகச்சிறந்த பூங்காவுக்குமாக இரண்டு சுழற்கோப்பைகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தருமபுரியில் மழை

**தருமபுரி,**

தருமபுரியில் செவ்வாய்க்கிழமை இரவு இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்தது. தருமபுரி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை முதல் கடுமையான வெப்பம் வாட்டியெடுத்தது. மேலும், பகலில் வெயில் அளவு 102 டிகிரியை கடந்து அனல் காற்று வீசியது. இந்த நிலையில், மாலை 6 மணியளவில் திடீரென வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர், இரவு 7.30 மணியளவில் இடி, மின்னலுடன் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது.

## விதை விற்பனையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்: துணை இயக்குநர் அறிவிப்பு

**சேலம்,**

சேலம் மாவட்டத்தில் விதை விற்பனையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து சேலம் விதை ஆய்வு துணை இயக்குநர் ப.செ்ந்தரராஜன் அறிவித்ததுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

விதை விற்பனை நிலையங்களில் விதை விற்பனை உரிமத்தை விவசாயிகளின் பார்வைக்குத் தெரியும்படி வைக்க வேண்டும். ஒரு தகவல் பலகையை வைத்து அதில் என்னென்ன விதைகள் விற்பனைக்காக உள்ளது அவற்றின் பெயர், ரகம், குவியல் எண், இருப்பு அளவு, விலை உள்ளிட்ட விவரங்களை தினசரி எழுதி வைக்க வேண்டும்.

விவசாயிகள் விதை வாங்கும்போது அவசியம் விற்பனை பட்டியல் (பில்) வழங்கப்பட வேண்டும். அந்தப் பட்டியலில் விதைகள் வாங்கும் விவசாயியின் பெயர், தந்தை பெயர், முகவரி, விதையின் பெயர், பயிர், ரகம், நிலை, வாங்கிய அளவு, குவியல் எண், காலாவதி தேதி ஆகிய விவரங்கள் அவசியம் குறிப்பிடப்பட வேண்டும். மேலும், அதில் விவசாயியின் கையொப்பம் இருப்பது மிகவும் அவசியம்.

இருப்பில் உள்ள விதைக் குவியல்களை ரகம் வாரியாக, குவியல் வாரியாக அடுக்கி வைக்க வேண்டும். விதைகளை உரங்கள், பூச்சி மருந்துகள் இல்லாத இடங்களில் தனியாக இருப்பு வைக்க வேண்டும். பதிவேட்டில் விதைக் குவியல்களை இருப்பு வைக்கும்போது, விதைகள் எங்கிருந்து வாங்கப்பட்டது என்ற விவரத்தையும், பயிர் வாரியாக, ரகம் வாரியாக, நிலை வாரியாக, கொள்கலன் வாரியாக இருப்பு வைத்து பராமரிக்க வேண்டும். விற்பனைக்கு வைத்திருக்கும் விதைக் குவியல்களுக்கு தரப் பரிசோதனை அறிக்கை வைத்திருக்க வேண்டும். விவரங்கள் குறைபாடு உள்ள விவர அட்டைகள் (லேபிள்) அடங்கிய விதைப் பைகளை விற்பனைக்கு வைக்கக் கூடாது. காலாவதியான விதைக் குவியல்களை விற்பனைக்கு வைக்கக் கூடாது. இருப்பில் உள்ள விதைகள் காலாவதியாகிவிட்டால் தனிப் பதிவேட்டில் பதிவு செய்து விற்பனைக்கு அல்லாத தனியிடத்தில் வைக்க வேண்டும்.

நல்ல முளைப்புத் திறனுடன் தேவையான பயிர் எண்ணிக்கை தந்து, சீரான வளர்ச்சியுடன் ஒரே சமயத்தில் பூத்து, முதிர்ந்து, ஒரே நேரத்தில் அறுவடை செய்ய ஏதுவான, கலப்படமில்லாத, அதிக மகசூல் தரக் கூடிய தரமான விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்து வேளாண் உற்பத்திக்கு உறுதுணையாக செயல்பட வேண்டும் என்று அனைத்து விதை விற்பனையாளர்களையும் விதை ஆய்வு துணை இயக்குநர் ப.செ்ந்தரராஜன் கேட்டுக் கொண்டார்.

## மீன்பிடி தடைக்காலம்: படகுகள் பராமரிப்பில் மீனவர்கள் தீவிரம்

**நாகப்பட்டினம்,**

மீன்பிடி தடைக்காலம் அமலில் உள்ளதையொட்டி, மீன்பிடி விசைப் படகுகளை சீரமைக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மீன்களின் இனப்பெருக்கக் காலத்தையொட்டி, 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ், தமிழகத்தின் கிழக்குக் கடலோரப் பகுதி மீன்பிடிப்புத் தொழிலுக்கு ஏப். 15-ம் தேதி முதல் மே 29-ம் தேதி வரை தடை அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், விசைப் படகு மூலமான ஆழ்கடல் மீன்பிடிப்பு முழுவதுமாக தடைபட்டுள்ளது. பைபர் படகுகள் மற்றும் கட்டுமரம் மூலமான மீன்பிடிப்பு மட்டும் தொடர்ந்து வருகிறது. அதிகளவிலான மீன்கள் ஆழ்கடல் மீன்பிடிப்பில் மட்டுமே அறுவடையாகும் என்பதால், மீன்வரத்து குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. பைபர் படகு மூலம் கிடைக்கப் பெறும் மீன்கள் உள்ளூர் சந்தையின் தேவையை மட்டுமே பூர்த்தி செய்கிறது. மீன்வரத்து குறைவு காரணமாக, மீன்களின் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது.

மீன்பிடி தடைக்காலத்தைப் பயன்படுத்தி மீனவர்கள், மீன்பிடி விசைப் படகுகளை சீரமைப்பது வழக்கம். இதன்படி, கடந்த ஏப்ரல் மாத இறுதியிலிருந்து மீன்பிடி படகுகள் சீரமைப்புப் பணி நடைபெறுகிறது. மீன்பிடி விசைப் படகுகளுக்கு வண்ணம் பூசுதல், பழுதான மரக்கட்டைகளை மாற்றுதல், படகின் பழுதை நீக்கும் வகையில் வெல்டிங் வைத்தல், மீன்பிடி வலைகளை சீரமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீன்பிடி தடைக்காலம் வரும் 8 நாள்களில் நிறைவடைய உள்ளதையொட்டி, நாகையில் படகுகள் சீரமைப்புப் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## வாய்க்கால் தூர்வாரும் பணி

**விருத்தாசலம்,**

விருத்தாசலம் அருகே அணைக்கட்டு வாய்க்கால் தூர்வாரும் பணி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விருத்தாசலத்தை அடுத்துள்ள மேமாத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள அணைக்கட்டிலிருந்து பரவளூர் வழியாக விருத்தாசலம் ஆலிச்சிக்குடி சாலையில்

உள்ள கஸ்பா ஏரிக்கு வரும் வாய்க்காலை ரூ. 2.30 லட்சத்தில் தூர்வாரி கரைகளை சீரமைக்கும் பணி பொதுப்பணித் துறை சார்பில் நடைபெற்றது. இதில் பொதுப்பணித் துறை ஊழியர்கள் ஈடுபட்டனர்.

## வேளாண்மை பல்கலை. பட்டங்கள் பெற விண்ணப்பங்கள் வரவேற்பு

**கோவை,**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா ஜூலை மாதம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதால் பட்டம் பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இப்பல்கலைக்கழகத்தால் மார்ச் 31 ஆம் தேதி அல்லது அதற்கு முன்னர் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட மாணவ, மாணவிகளிடம் இருந்து பட்டங்கள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பப் படிவம் மற்றும் இதர விவரங்களை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து மே 13 ஆம் தேதி முதல் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப கட்டணத்தை பல்கலைக்கழக இணையதளத்தின் மூலம் செலுத்த வேண்டும். இந்த பட்டமளிப்பு விழாவிற்கு பூர்த்தி செய்யப்பட் விண்ணப்பங்கள் உரிய இணைப்புகளுடன் (அதாவது தாற்காலிக பட்டப்படிப்பு சான்றிதழின் நகர் மற்றும் இணையதளம் மூலமாக வங்கியில் செலுத்தப்பட்ட கட்டணத்திற்கான ரசீது) இப்பல்கலைக்கழகத்திற்கு ஜூன் 13 ஆம் தேதிக்குள் வந்து சேர வேண்டும் என பதிவாளர் (பொறுப்பு) ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

## காரைக்கால் வேளாண் கலூரிக்கான மாணவர் சேர்க்கை

**காரைக்கால்,**

காரைக்காலில் உள்ள புதுவை அரசின் பண்டித ஜவஹர்லால் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 2014-15 ம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அக்கல்லூரி சார்பில் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பது,

பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வேளாண் இளங்கலை (பிஎஸ்சி.அக்ரி) பட்டப்படிப்பு பயில மே 19 ந்தேதி முதல் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

விண்ணப்பங்களை பெறுவதற்கும் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை கல்லூரியில் சமர்ப்பிப்பதற்கும் கடைசி நாள் ஜூன் 13ந் தேதி ஆகும்.விண்ணப்பத்தின் விலை ரூ.500.(எஸ்சி எஸ்டி மாணவர்களுக்கு ரூ.250)இவ்வாண்டு மாணவர் சேர்க்கையில் 80 இடங்களுடன் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கென 8 இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

வேளாண் இளங்கலை பட்டப் படிப்பு பயில்வதற்கு மேல்நிலைத் தேர்வில் மாணவர்கள் கீழ்கண்ட பாடப்பிரிவுகளில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து படித்திருக்க வேண்டும்.

1.இயற்பியல்,வேதியியல்,உயிரியல் மற்றும் கணிதம்

அல்லது)2.இயற்பியல்,வேதியியல்,உயிரியியல் மற்றும் கணினி அறிவியல்,உயிர் வேதியியல்,உயிர் தொழில் நுட்பவியல்,நுண்ணுரியல்,மனையியல் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்று (அல்லது)3.இயற்பியல்,வேதியியல்,தாவரவியல் மற்றும் விலங்கியல்.

புதுவை அரசின் கீழ் இயங்கும் கல்லூரியானாலும் இதற்கான மாணவர் சேர்க்கை சென்டாக் மூலம் அல்லாமல் நேரடியாக நடத்தப்படுகிறது.அதனால் மாணவர்கள் கல்லூரிக்கு நேரடியாக விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு www.pajancoa.ac.in என்ற கல்லூரியின் இணைய தளத்திலும் 04368-261473,261372,261288 என்ற தொலைபேசி எண்களிலும் தொடர்புகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியாளர் பணி

Tamil Nadu Veterinary and Animal Sciences University
Madhavaram Milk Colony, Chennai - 600 051

தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகத்தில் (TANUVAS) காலியாக உள்ள ஜூனியர் ஆராய்ச்சியாளர் பணியிடங்களை நிரப்ப தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**பணி:** Junior Research Fellow (JRF)

**காலியிடம்:** 02

**சம்பளம்:** தொகுப்பூதியமாக மாதம் ரூ.18,000 வழங்கப்படும்.

**கல்வித் தகுதி:** M.V.Sc./ B.V.Sc, M.Sc in Biotechnology/ Microbiology/ Molecular Biology/ Biochemistry போன்ற ஏதாவதொரு துறையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

**தேர்வு செய்யப்படும் முறை:** நேர்முகத் தேர்வின் மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

**நேர்காணல் தேதி மற்றும் இடம்:** 21.05.2014 அன்று காலை 11 மணிக்கு.

TRPVB, 2nd floor, Central University Laboratory (CUL), Building, TANUVAS, Madhavaram Milk Colony, Chennai 600051

மேலும் முழுமையான விவரங்கள் அறிய **www.tanuvas.ac.in** என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

## +2 தகுதிக்கு மீன்வள ஆராய்ச்சித் துறையில் பணி

மத்திய அரசின் சென்டரல் இன்,ஸ்டிடியூட் ஆஃப் ஃபிஷரீஸ் டெக்னாலஜி எனப்படும் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் கொச்சி, விசாகப்பட்டினம் மற்றும் மும்பை கிளைகளில் காலியாக உள்ள பல்வேறு பணியிடங்களை நிரப்ப தகுதியும் விருப்பமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி: டெக்னிக்கல் அசிஸ்டன்ட் மற்றும் நிர்வாகப் பணி

காலியிடங்கள்: 21

துறைவாரியான காலியிடங்கள் விவரம்:

டெக்னிக்கல் துறை:

01. லேப் டெக்னீசியன் - 04

02. ஃபீல்ட் மற்றும் ஃபார்ம் - 02

03. பிரஸ் மற்றும் எடிட்டோரியல் - 01

நிர்வாகத் துறை:

01. ஸ்டெனோ - 02

02. லோவர் டிவிசன் கிளார்க் - 08

03. ஸ்கிப்பர் - 04

கல்வித்தகுதி: டெக்னிக்கல் பிரிவுக்கு சம்மந்தப்பட்ட துறைகளில் பட்டமும், நிர்வாக பிரிவு பணிகளுக்கு +2 தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஸ்கிப்பர் பணிக்கு பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

வயதுவரம்பு: 18 முதல் 30-க்குள் இருக்க வேண்டும்.

விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி: 26.05.2014

மேலும் விண்ணப்பிக்கும் முறை, தேர்வு செய்யப்படும் முறை போன்ற முழுமையான விவரங்க அறிய www.cift.res.in என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## சிறு, குறு விவசாயிகளுக்கு ஏற்ற வெள்ளரி சாகுபடி

கோடைப் பட்டத்தில் பலவிதமான பணப்பயிர்களை சாகுபடி செய்யலாம். இருப்பினும் கோடைப் பட்டத்தில் பயிர் சாகுபடிக்கு அபரிமிதமான பாசன நீர் கிடைக்காது. இருக்கும் நீரினை உபயோகித்து மார்க்கெட்டில் நல்ல விலை போகும். மற்றும் விளைச்சலை கொடுக்கும் பயிர்களை சாகுபடி செய்து பணம் சம்பாதிக்க வேண்டும்.

கோடைப் பட்டத்தில் நல்ல வருவாயினை தருவது வெள்ளரி சாகுபடி ஆகும். இந்தப் பயிர் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மிகவும் ஏற்றது. இந்த விவசாயிகளுக்கு அதிக நிலப்பரப்பு இருக்காது. இவர்கள் வெள்ளரி சாகுபடியை அரை ஏக்கர் அல்லது ஒரு ஏக்கர் தான் செய்ய இயலும். கிணற்றுப் பாசனம் இருந்தால் டீசல் இன்ஜின் கொண்டு பாசனம் செய்யும் வசதி தான் இருக்கும். கிணற்றில் தண்ணீர் இல்லை என்றால் சொட்டுநீர் பாசனம் மூலம் விவசாயப் பணிகளை தொடரலாம். இந்த சிறு விவசாயி கள் கடும் கோடை வெய்யிலில் கடுமையாக உழைக்கத் தயாராக இருக்கிறார்கள். இவர்கள் சாகுபடிக்கு கூலி ஆட்கள் வைத்தாலும் அவர்களோடு குடும்ப நபர்களோடு இணைந்து வேலை செய்வார்கள். ஆதலால் விவசாயம் மிகுந்த அக்கறையோடு செய்யப்படுகின்றது. விவசாயப் பணிகள் குறிப்பிட்ட சமயத்திற்குள் செய்து முடிக் கப்படுகின்றது. இதனால் சாகுபடியில் இவர்களால் நல்ல லாபத்தினை எடுக்க இயலுகின்றது. வெள்ளரி சாகுபடி காலம் 90 நாட்கள் ஆகும். பிஞ்சினை அப்படியே விட்டால் அது மிகப்பெரிய காயாக மாறி அதிக விதைகளைக் கொண்டு இருக்கும். இதனை விற்று லாபம் எடுக்க முடியாது. நுகர்வோர்கள் இக்கட்டத்திலுள்ள காய்களை விரும்புவதில்லை. இந்தக் காய்கள் சுவைப்பதற்கு ஏற்று வராது. ஆனால் இதில் அதிசயம் என்னவென்றால் வெள்ளரி காய்த்து பிஞ்சாக இருக்கும்போது அது சுவைமிக்கதாக இருக்கும். பிஞ்சு வெள்ளரி மூன்று தரம் கொண்டதாக இருக்கும். மிகச் சிறிய பிஞ்சுகள் நீளம் ஆறு அங்குலத்திற்குள் இருக்கும். இவைகள் மிகச்

சுவை கொண்டதாக இருக்கும். ஒருவிதை கூட காயில் இருக்காது. இத்தகைய காய்களை விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் கிலோ ரூ.8 கொடுத்து வாங்கி பின்னால் தாங்கள் காய்களை கிலோ ரூ.25 வரை விற்கின்றனர். இரண்டாம் தரக்காய்கள் இவைகள் 9 அங்குலம் நீளம் வரை இருக்கும். இதன் விலை ரூ.15 வரை இருக்கும். பெரிய பிஞ்சுகள் இவைகளின் நீளம் 10 - 11 அங்குலம் இருக்கும். இதன் விலை கிலோவிற்கு ரூபாய் 10 வரை இருக்கும். முதல் இரண்டு தரம் கொண்ட காய்கள் சிரமம் இன்றி விற்பனையாகி விடும். மூன்றாம் தரக்காயில் விற்பனை சில சமயம் பிரச்னையாக இருப்பதுண்டு. பிஞ்சு வெள்ளரி தமிழ்நாட்டில் சிறப்பாக சாகுபடி செய்யப்படுகின்றது. சொட்டுநீர் பாசனத்திலும் சாகுபடி செய்யப்படுகின்றது. மார்க்கெட்டில் இருந்து வியாபாரிகள் வண்டியில் கிராமத்திலுள்ள விவசாயிகள் நிலங்களுக்கு நேரில் சென்று பிஞ்சு வெள்ளரியை விலைக்கு வாங்குகின்றனர். விவசாயிகளுக்கும் மார்க்கெட்டிற்கு எடுத்துச் சென்று விற்கின்றனர்.

**சாகுபடி விவரங்கள் :** விவசாயிகள் தனது டீசல் ஆயில் இன்ஜின் செட்டினை உபயோகித்து பாசனம் செய்து வெள்ளரி சாகுபடி செய்கின்றனர். விவசாயி ஒரு ஏக்கரில் வெள்ளரி சாகுபடி செய்ய தேவையான விதையினை தயார் செய்து கொள்கிறார். ஏக்கருக்கு 150 கிராம் விதையினை உபயோகப்படுத்த வேண்டும். விவசாயி தனது நிலத்தை டிராக்டர் கொண்டு ஒரு உழவு இட்டு அதனை வயல் பூராவும் மண்ணோடு சீராக கலந்து உழுது கொள்ள வேண்டும். பிறகு ஏக்கரில் 600 குழிகள் போட வேண்டும். நிலத்திற்கு அடியுரமாக 1-1/2 மூட்டை பேக்ட் அம்மோபாஸ் உரத்தைப் போட்டு மண்ணோடு கலக்க வேண்டும். நிலத்திலுள்ள குழிகளில் இயற்கை உரமும், ரசாயன உரமும் உள்ளது. உடனே குழிக்கு மூன்று விதைகள் விதைத்து தண்ணீர் விடுகின்றார்.

இவ்வாறு 15 நாட்கள் செய்து விட்டு பிறகு நிலத்தில் கால்வாய் போட்டு பாசனம் செய்ய வேண்டும். குழிகள் அனைத்திற்கும் ஏக்கருக்கு 1-1/2 மூட்டை பாரமாபாஸ் 20:20 உரம் இட வேண்டும். குழிகளில் களைச்செடிகளை குச்சிகளை உபயோகித்து அகற்ற வேண்டும். செடிகள் நன்கு பூக்கள் பிடித்து காய்கள் காய்க்கத் தொடங்கும். சாகுபடி சமயம் விவசாயி தனது பயிரினை பூச்சிகள், பூஞ்சாளங்கள் தாக்காமல் இருக்க தக்க பயிர் பாதுகாப்பு முறைகளை அனுசரிக்க வேண்டும்.

வெள்ளரி சாகுபடியில் பயிரில் விதைத்த 45-வது நாளிலிருந்து ஒரு நாள் விட்டு

ஒருநாள் அறுவடையில் வருமானம் கிடைக்கின்றது. கோடை காலத்தில் குறுகிய நாட்களில் பலன் தரும் பிஞ்சு வெள்ளரி சாகுபடி ""சிறு விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம்" என்று சொல்வது பொருத்தமாகும்.

## சின்ன சின்ன செய்திகள்

தானியங்களில் உமியை அகற்றும் புதிய கருவி: இந்தியாவில் அதிக அளவில் சிறுதானியங்கள் பயிரிடப்பட்டு அறுவடைக்குப்பின் சிறந்த முறையில் பதப்படுத்த சீரிய இயந்திரங்கள் இதுவரை இல்லாத காரணத்தினால் இதன் பயன்பாடும் வெகுவாக குறைந்து விட்டது. பொதுவாக தினை, சாமை, வரகு பனிவரகு, குதிரைவாலி போன்ற தானியங்கள் அளவில் மிகவும் சிறியதாக இருப்பதால் இவற்றை கையாள்வது மிகவும் சிரமமாக உள்ளது.

இவ்வகை தானியங்களில் சுமார் 25-30 சதம் உமி இருப்பதால் அப்படியே உணவில் சேர்த்துக் கொள்ள முடிவதில்லை. இதனை கருத்தில் கொண்டு கோயம்புத்தூரிலுள்ள மத்திய வேளாண்மை பொறியியல் மண்டல ஆராய்ச்சி நிறுவனம் சிறுதானியங்களை உடைத்து உமி தவிட்டை முற்றிலுமாக அகற்றுவதற்கு புதியதொரு இயந்திரம் CIAE Millet மில்லை உருவாக்கியுள்ளது. இதில் அனைத்து சிறுதானியங்களையும் ஒரே இயந்திரத்தில் முதல்முறை செலுத்தும் போதே (சிங்கிள் பேஸ்) 95 சதவீத உமி தவிட்டை சுத்தமாக நீக்கும். மொத்த எடை 120 கிலோ கொண்ட சிஐஏஇ சிறுதானிய அரவை மில்லில் குறைந்த அளவு அதாவது 100 கிராம் முதல், ஒரு மணி நேரத்திற்கு 100 கிலோ வரை சிறந்த முறையில் உமி நீக்கம் செய்ய முடியும். வீட்டில் உள்ள பெண்கள் கூட இதை எளிதில் கையாள முடியும். இந்த இயந்திரம் வேலை செய்யும் போது அதிக ஓசை வராது.

தூசு, உமிகளை வைத்து சுற்றுச்சூழல் மாசடைவதைத் தடுக்க சைக்லோன் பிரிப் பான் பொருத்தப்பட்டுள் ளது. ஒரு குதிரை திறன் கொண்ட மின்மோட்டாரில் இயங்கும். CIAE Millet மில்லை இயக்க சிங்கிள் பேஸ் மின்சாரம் போதுமானது. (தகவல்: முனைவர் சி.பாலசுப்பிரமணியன், முதன்மை விஞ்ஞானி, மண்டல அலுவலகம், மத்திய வேளாண்மை பொறியியல் நிறுவனம், கோயம்புத்தூர்-641 003. போன்: 086810 17811)

**வனத்துறை மரக்கன்றுகளை இலவசமாக நடவு செய்து தருகிறது:** இது பற்றி தமிழக வனத்துறையின் கூடுதல் முதன்மை வனப்பாதுகாவலர் இருளாண்டி கூறுவது. தமிழக அரசு ஜப்பான் நாட்டின் உதவியுடன் தனியார் தரிசு நிலங்களில் நிலம் வளர்க்கும் திட்டமும், மரம் வளர்க்கும் திட்டமும் தமிழகம் முழுவதும் சுமார் 6 ஆயிரம் முதல் 8 ஆயிரம் கிராமங்களைத் தேர்வு செய்து 3 கோடி மரக்கன்றுகள் நடவு செய்வதற்கு திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்களது தரிசு நிலங்களில் மரக்கன்றுகள் வளர்க்கலாம்.

இதற்கான வனத்துறை சார்பாக தேக்கு பீதனக்கன், பீநாரி, குமிழ், வேம்பு, மகோகனி, வாகை, வேங்கை ஆகிய மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தில் இணைய விரும்பும் விவசாயிகளை அந்தந்த மாவட்ட வன விரிவாக்க மையங்களைத் தொடர்பு கொண்டு பட்டா, சிட்டா அடங்கல், மார்பளவு புகைப்படம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்க வேண்டும். ஒரு ஏக்கர் 200 மரக்கன்றுகள் வரை நடவு செய்யலாம். 3 வருடங்கள் வரை நல்ல முறையில் பராமரிக்க விவசாயிகளுக்கு மரம் ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் 1000 ரூபாய் வரை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 32 மாவட்ட வன விரிவாக்க மையங்களில் இந்தப்பணி செவ்வனே நடைபெற்று வருகிறது. **AGRITEAT 2014 :** தென்னிந்தியாவில் மாபெரும் விவசாயக் கண்காட்சி ஜூன் 19,20,21,22 தேதிகளில், மதுரை தமுக்கம் மைதானம், மதுரை. தொடர்புக்கு The Chairman, United Trade fairs India Pvt Ltd, 1A கஸ்தூரிபாய் வீதி, கணபதி, கோயம்புத்தூர் -641 006. செல்: +9193600 93603. போன்: 0422 - 322 8111.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**வனத்துறை மண்டல அலுவலர், முகவரி மற்றும் தொலைபேசி எண்கள்:**

தலைமை வனப்பாதுகாவலர் (ஆராய்ச்சி) மண்டலம், கொளம்பாக்கம், சென்னை. - 044 - 2275 1465

வனப்பாதுகாவலர், கோவை மண்டலம், கோவை. - 0422- 245 3114

வனப்பாதுகாவலர், மதுரை மண்டலம், மதுரை. - 0452 - 241 2114

வனப்பாதுவலர், திருச்சி மண்டலம், திருச்சி. - 0431 - 246 0010

வனப்பாதுகாவலர், திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல். - 0451- 242 0916

வனப்பாதுகாவலர், தர்மபுரி மண்டலம், தர்மபுரி. - 04342 - 231 043

வனப்பாதுகாவலர், ஈரோடு மண்டலம், ஈரோடு. - 0424 - 229 1876

வனப்பாதுகாவலர், சேலம் மண்டலம், சேலம். - 0427 - 241 2114

வனப்பாதுகாவலர், விருதுநகர் மண்டலம், விருதுநகர். - 04562 - 252 158

## பருத்தியில் "இலைப்பேன்'

மாசிப்பட்ட பருத்தி சாகுபடியின் "இலைப்பேன்' தாக்குதலை கண்காணிக்க வேண்டும். பயிரின் இளம்பருவத்தில் நிலவும் வெப்பமான கால நிலையால், "இலைப்பேன்' தாக்குதல் ஏற்படலாம். இலைகளின் கீழ்ப்புறம் பளபளப்பாகி, பின் பழுப்பு நிறமடையும். தீவிரமான நிலையில், இலைகள் மொறமொறப்பாகி விடும். பசுமை மாறி, பழுப்பு நிறமடைவதால், இலைகளின் மூலம் ஒளிச்சேர்க்கை பாதிக்கப்பட்டு, பயிர் வளர்ச்சி குன்றும்.

ஒருலிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லி "டைமீதோயேட்' மருந்து கலக்கலாம். அல்லது ஒன்றரை மில்லி "பிப்ரோனில்' கலந்து கைத்தெளிப்பான் மூலம் கட்டுப்படுத்தலாம். தாக்குதல் அதிகமாக இருந்தால், 15 நாட்கள் இடைவெளியில் மீண்டும் ஒருமுறை, இலைகளின் கீழ்ப்பகுதியிலும் மருந்து படும்படி தெளிக்க வேண்டும். மருந்து கரைசல் இலைகளில் படிவதற்காக, திரவ சோப்புகளை பயன்படுத்தலாம். **அமலா, பயிர் மருத்துவ நிலைய துறைத் தலைவர், பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்.**

## துரியன் பழங்கள் அமோக விற்பனை !

**ஊட்டி** : குழந்தை பாக்கியத்துக்கு உகந்த பழம்' என, கருதப்படும், துரியன் பழங்களின் விற்பனை சூடுபிடித்துள்ளது. பழங்களின் அரசன் என, துரியன் பழம் வர்ணிக்கப்படுகிறது. இவை, தென் கிழக்கு ஆசிய நாடுகளை தாயகமாகக் கொண்டவை; வைட்டமின்கள் மற்றும் தாதுசத்துக்கள் நிறைந்தது.

உடலுக்கு தேவையற்ற கொழுப்புகளை, கரைக்கும் சக்தியும், குழந்தை பாக்கியம் தரும் ஆற்றலும் இப்பழத்திற்கு உண்டு என, பலர் கருதுகின்றனர்.நீலகிரி மாவட்டம், குன்னூர் பர்லியார் பழப்பண்ணையில் உள்ள, 33 துரியன் பழ மரங்களில், ஆண்டுக்கு, 2 முறை, துரியன் பழங்கள் காய்க்கும். நீலகிரி அரசு தோட்டக்கலை பண்ணைகளில் மட்டுமே கிடைத்து வந்த துரியன் பழங்கள், தற்போது, கேரளாவில் இருந்து வரவழைக்கப்பட்டு, ஊட்டியில், விற்கப்படுகின்றன. துரியன் பழங்கள், கிலோ, 400 முதல் 450 ரூபாய்க்கு

விற்கப்படுகின்றன. மக்கள், இந்த பழங்களை வாங்க, அதிக ஆர்வம் காட்டுவதால், 'ஆன் லைன்' மூலமாகவும், துரியன் பழ விற்பனை களைகட்டுகிறது.

## தருமபுரி மாவட்டத்தில் பரவலாக மழை

**தருமபுரி**:தருமபுரி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது.வெப்பசலனம் காரணமாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே சில இடங்களில் மழை பெய்கிறது.

## 30ல் விவசாயிகள் குறைதீர்க்கூட்டம்

**காஞ்சிபுரம்** : வருகிற 30ம் தேதி, விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற உள்ளது.

லோக்சபா தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருந்ததால், கடந்த மார்ச் மாதம் முதல் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ரத்து செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில், தேர்தல் நடத்தை விதிகள் முடிவுக்கு வந்துள்ளதால், அரசு நிர்வாகம் வழக்கம்போல் செயல்பட தடை இல்லை என, தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்திருந்தது.இதை தொடர்ந்து, வரும் 30ம் தேதி அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள ஊரக வளர்ச்சி துறை கட்டடத்தில், மாவட்ட ஆட்சியர் பாஸ்கரன் தலைமையில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது. இதில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள விவசாயிகள், வேளாண் துறை மற்றும் அதன் சார்பு துறைகளில் உள்ள, குறைகள் தொடர்பாக, ஆட்சியரிடம் மனு அளிக்கலாம் என, மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## முருங்கைக்காய் விலை வீழ்ச்சி

**அவலூர்பேட்டை**: ஒரு முருங்கைக்காய் சாதாரணமாக ஐந்து ரூபாய்க்கு விற்கப்பட்டது. முருங்கைக்காயின் விலை மார்க்கெட்டில் கடந்த இரண்டு வாரங்களாக குறைந்து வருகிறது. அதிகளவில் மகசூல் காரணமாக நாட்டு முருங்கைகாய்கள் கிராமபகுதிகளில் ஒரு கட்டு இரண்டு ரூபாய் என விற்பனை செய்கின்றனர். அவலூர்பேட்டையில் உள்ள காய்கறி கடையில் ஒரு கிலோ எட்டு ரூபாய்க்கு விற்றனர்.

## சிறுகீரை தோட்டம்: விவசாயிகள் ஆர்வம்

அவலூர்பேட்டை: மேல்மலையனூர் பகுதியில் தண்ணீர் பற்றாக்குறைக்கேற்ப விவசாயிகள் சிறு கீரை வைத்து வருவாய் ஈட்டி வருகின்றனர். மேல்மலையனூர் ஒன்றியம் சிறுதலைப்பூண்டி ஊராட்சி முருகன் தாங்கல் பட்டி கிராமத்தை சேர்ந்தவர் சுந்தரமூர்த்தி(30). தண்ணீர் பற்றாக்குறை உள்ளதால், வருவாய் ஈட்டும் வகையிலும், இருக்கும் தண்ணீரை கொண்டு எளிய விவசாயம் செய்ய எண்ணினார். இதனால் சிறு கீரை பயிர் செய்ய முடிவு செய்தார். தனியாரிடத்தில் கீரை விதைகளை விலைக்கு வாங்கினார். நிலத்தில் அடிஉரமிட்டு, புழுதி ஓட்டி, பாத்திகட்டி, விதையிட்டு, இரண்டு நாளைக்கு ஒரு முறை என தண்ணீரை பாத்தி கட்டினார். 20 நாள் பயிரான சிறு கீரை தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளது. கட்டு ஐந்து ரூபாய் என சில்லரை விற்பனையில் விற்கிறார். கீரை முழுவதும் கட்டு கட்டி ஆரணி உள்ளிட்ட மார்க்கெட்டிற்கும் அனுப்பி வைக்கிறார். இதன் மூலம் 20 நாளைக்குள் நல்ல வருவாய் ஈட்ட முடிகிறது என்கிறார்.

## சொட்டு நீர் பாசனம் மூலம் மரவள்ளி சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம்

**கள்ளக்குறிச்சி**: கள்ளக்குறிச்சி பகுதியில் சொட்டு நீர் பாசனம் மூலம் மரவள்ளி சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கள்ளக்குறிச்சி பகுதியில் கடந்தாண்டு பருவமழை பொய்த்ததால் அணைகள், ஏரிகள், குளங்கள் போன்ற நீர் நிலைகள் வறண்டன. இதனால் நிலத்தடி நீர்மட்டமும் நாளுக்கு நாள் குறைந்தது. இதனால் கிணற்று நீர்பாசனத்தை நம்பி கரும்பு, நெல், மக்காச்சோளம், மரவள்ளி பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். கிடைக்கும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தும் வகையில் சொட்டு நீர் பாசனம் மூலமும் பயிர் சாகுபடி செய்யப்படு கிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு சிறிதளவு பெய்த மழை சாகுபடி செய்த நிலங்களுக்கு ஓரளவிற்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது. கள்ளக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதியில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் மரவள்ளி சாகுபடி செய்யப்படுகிறது. பத்து மாதம் பயிரான மரவள்ளிக்கு தண்ணீர் தேவை அதிகம் என்பதாலும், வரும் காலங்களில் நிலத்தடி நீர் மட்டம் முற்றிலும் குறைவதற்கு வாய்ப்புள்ளதால் தண்ணீரை சேமிக்கும் வகையில் சொட்டு நீர் பாசனம் மூலம் மரவள்ளி சாகுபடி செய்வதற்கு விவசாயிகள் ஆர்வம் பலர் காட்டியுள்ளனர். கள்ளக்குறிச்சி அடுத்த இந்திலி, கனியாமூர்,

தொட்டியம், தெங்கியாநத்தம், குரால், எலவடி, கூகையூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சொட்டு நீர் பாசனம் மூலம் அதிகளவில் மரவள்ளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

## நாமகிரிப்பேட்டையில்ரூ.1.10 கோடிக்கு மஞ்சள் விற்பனை

**ராசிபுரம்**: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 1.10 கோடி ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் போனது. நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்துக்கு தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள், மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றன. நேற்று நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 2,884 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிகபட்சம், 8,430 ரூபாய்க்கும், குறைந்தபட்சம், 6,949 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை, 7,349க்கும், குறைந்தபட்சம், 6,499 ரூபாய்க்கும் ஏலம் போனது. அதே போல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 16,600 ரூபாய்க்கும், குறைந்தபட்சம், 12,700 ரூபாய்க்கும் ஏலம் போனது. நேற்று, 1.10 கோடி ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## தென்னை சாகுபடியில் பல அடுக்கு தோட்டக்கலை பயிர்; வருவாய் பெருக்க தோட்டக்கலைத்துறை ஐடியா!

**உடுமலை** : 'தென்னை சாகுபடியில், பல அடுக்குகளாக தோட்டக்கலைப்பயிர்களை சாகுபடி செய்வதால், விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும்' என, தோட்டக்கலைத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது. உடுமலை பகுதியில் பிரதான சாகுபடியாக தென்னை சாகுபடி உள்ளது. கிணற்றுப்பாசனத்தின் மூலம், தென்னை மரம் வளர்க்கும் விவசாயிகள், பல அடுக்குகளாக தோட்டக்கலைப்பயிர்களை சாகுபடி செய்ய தோட்டக்கலைத்துறை விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இத்தகைய சாகுபடியால், மண் வளம் அதிகரிப்பதுடன், வருவாயும் பல மடங்கு உயரும். இது குறித்து உடுமலை

தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் இளங்கோவன் கூறியதாவது: தென்னந்தோப்புகளில், மரங்களுக்கு இடையில் கிடைக்கும் சூரிய ஒளியை பயன்படுத்தி, பல்வேறு தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்யலாம். தென்னை மரத்தின் மேல்பகுதியிலிருந்து, மண் பகுதி வரையுள்ள இடைவெளியில், பல்வேறு உயரங்களில் பயிர் வகைகளை நடலாம்.

முதல் அடுக்கு : முதல் அடுக்கில் அதிக உயரம் வளரக்கூடிய, ஜாதிக் காய், சில்வர் ஓக் ஆகிய மரங்களை நடவு செய்வதால், தென்னை மரங்களுக்கு இணையாக வளர்ந்து, நீண்ட கால வருவாய் கிடைக்கும்.

இரண்டாவது அடுக்கு : இரண்டாவது அடுக்கில், தென்னை மரத்தை சார்ந்து 12 முதல் 15 அடி உயரம் வரை குருமிளகு பயிரிடலாம்.

மூன்றாவது அடுக்கு : மூன்றாம் அடுக்காக, தென்னையின் இடையே உள்ள மண் பகுதியில், ஆணி வேர்கள் செலுத்தி, குறைந்த உயரத்தில், 3 முதல் 4 அடி உயரம் மட்டும் வளரும் கோகோ பயிரை தேர்வு செய்யலாம். அதே உயரத்தில் வளரும் அகத்தி, கறிவேப்பிலை, மரவள்ளி ஆகிய பயிர்களையும் நடவு செய்யலாம். நான்காவது அடுக்கு : நான்காவது அடுக்கில், நிழலில் மிகக்குறைந்த வெளிச்சத்தில் வளரும், அன்னாசிப்பழம், இதர புல்கரணைகள், கம்பு, கனகாம்பரம், இஞ்சி, சேனை, சம்பங்கி மலர், மல்லிகை ஆகிய சாகுபடிகளையும், நடவு செய்யலாம். மண் வளத்தை பாதுகாக்கும், வெட்டிவேர், கொழுக்கட்டைப்புல், கொத்து அவரை, கொத்தமல்லி, ஆகியவற்றை கலந்து பயிரிடலாம். இத்தகைய அடுக்கு முறை சாகுபடியால், கூடுதல் வருவாய் கிடைக்கும். இத்தகைய ஊடுபயிர்களால் தென்னை பாதிக்கப்படாமல் இருக்க, மண் வளம் அறிந்து உரமிட வேண்டும். இவ்வாறு, இளங்கோவன் தெரிவித்தார்.

## குறுகிய காலத்தில் அதிக விளைச்சல்; நெல் ரகத்தை பயன்படுத்த அறிவுரை

கூடலூர் : கூடலூர் பகுதியில் குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் தரும் "கோ-50' என்ற புதிய நெல் வகையை பயிரிட அறிவுறுத்தியுள்ளது.

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் சார்பில், குறைந்த நாட்களில் அதிக மகசூல் தரும் புதிய வகை நெல்வகைகள், கடந்த 2009ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டன. நீலகிரி மாவட்டம் கூடலூரில் இதன் விளைச்சல்

குறித்து அறிய, புளியாம்பாறையில் உள்ள அரசு வீரிய ஒட்டு நெல் ஆராய்ச்சி மையத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து, கூடலூர் பகுதியிலுள்ள 10 சிறு விவசாயிகளின் வயலில் இந்த "கோ-50' ரக நெல்லை பயிரிட்டு கண்காணித்து வந்தனர். இந்த விதை மூலம், நல்ல மகசூல் கிடைத்தது. இதனை தொடர்ந்து, இந்த ரகத்தை அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கி, உற்பத்தியை அதிகரிக்கும் பணிகள் நடந்து வருகின்றன.இது குறித்து கூடலூர் வீரிய ஒட்டு நெல் ஆராய்ச்சி மைய தலைவர் பேராசிரியர் மனோன்மணி கூறுகையில்,""இந்த நெல் ரகத்தில், ஏக்கருக்கு 8 டன் வரை மகசூல் கிடைக்கும். மற்ற நெல் வகையை விட 500 முதல் 2500 கிலோ வரை அதிக மகசூல் கிடைக்கிறது. இவ்வகை நெல் விதை பெற விரும்பும் விவசாயிகள், கூடலூரில் உள்ள வீரிய ஒட்டு நெல் ஆராய்ச்சி மையத்தில் முன்பதிவு செய்தால், கோவை வேளாண் பல்கலைக் கழகத்தில் இருந்து பெற்று தரப்படும்," என்றார்.

## தக்காளி வரத்து குறைவால் விலை உயர்வு

**கோபால்பட்டி** : கோபால்பட்டி மார்க்கெட்டில் தக்காளி வரத்து குறைவால், விலை உயர்ந்துள்ளது. இது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சாணார்பட்டி அருகேயுள்ள கோபால்பட்டி செடிபட்டி, அஞ்சுகுழிப்பட்டி, நத்தம்மாடிபட்டி, தவசிமடை, சில்வார்பட்டி, மணியக்காரன்பட்டி உட்பட பல இடங்களில் தக்காளி விளைவிக்கப்படுகிறது. இந்த தக்காளி கோபால்பட்டி மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு தினமும் கொண்டு வரப்படுகிறது. இந்தாண்டு மழை இல்லாததால், இந்த பகுதிகளில் தக்காளி விளைச்சல் குறைவாக உள்ளது. இதனால் கடந்த ஒருவாரமாக, கோபால்பட்டி மார்க்கெட்டிற்கு தக்காளி வரத்து குறைவாக உள்ளது. இதனால் விலை உயர்ந்து வருகிறது. கடந்த வாரம் 15 கிலோ கொண்ட ஒரு பெட்டி ரூ.250 க்கு விற்பனையானது. நேற்று 15 கிலோ கொண்ட ஒரு பெட்டி ரூ.300 க்கு விற்பனையானது. ஒரு கிலோ ரூ. 20 க்கு விற்றது. விவசாயிகள் கூறியதாவது: விளைச்சல் குறைவாக இருப்பதால், தக்காளிக்கு கூடுதல் விலை கிடைப்பது மகிழ்ச்சியாக உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த கோடை மழை விளைந்த செடிகளையும், தக்காளியையும் நாசம் செய்து விட்டது. வரும் நாட்களில் தக்காளி வரத்து குறைவதற்குத்தான் வாய்ப்புள்ளது, என்றனர்.

## தாண்டிக்குடியில் ஆலங்கட்டி மழை

தாண்டிக்குடி : தாண்டிக்குடியில் நேற்று மாலை ஆலங்கட்டி மழை பெய்தது. கடந்த ஒரு வாரமாக அக்னி நட்சத்திர வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. தொடர் ந்து காலையில் பனியால் குளிர் நிலவி வந்தது. இரு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து கடும் வறட்சி நீடித்து குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்நிலையில் அக்னி நட்சத்திரம் துவங்கியதையடுத்து எதிர்பாராமல் மழை பெய்தது. இதில், தாண்டிக்குடி மலைப்பகுதியில் பரவலாக 110 .மி.மீ., மழை பெய்து தற்காலிக தீர்வு ஏற்பட்டது. இதன் பின் 10 நாட்கள் இடைவெளிக்கு பின் நேற்று மாலை ஆலங்கட்டி மழை பெய்தது. ஒன்றை மணி நேரம் நீடித்த நிலையில் 20. மிமீ., பதிவாகியது. கோடை வெயிலுக்கு மத்தியில் பெய்த மழை, தாண்டிக்குடி பகுதியை குளிர செய்தது. தற்போதைய மழை, மலை விவசாயங்களுக்கு ஏற்றதாக அமைந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## மே 23ல் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள்

**தேனி** : லோக்சபா தேர்தல் முடிந்ததையொட்டி, தேர்தல் நடத்தை விதிமுறை நீக்கப்பட்டுள்ளது. இதையொட்டி,தேனி கலெக்டர் அலுவலகத்தில், மே 23 மாலை 3.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது. இந்த கூட்டத்தில் விவசாயம் உள்ளிட்ட துறை அதிகாரிகள் பங்கேற்பதால், விவசாயிகள் தங்கள் பகுதி குறைகளை தெரிவித்து, தீர்வு பெறலாம், என கலெக்டர் பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பருத்தியில் நோய் கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி ஆலோசனை

**காரைக்கால்**: மழையால், பருத்தி செடியில் நோய் தாக்காமல் இருக்க, விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி ஆலோசனை வழங்கியுள்ளார். காரைக்கால் வேளாண்துறை கூடுதல் இயக்குனர் மதியழகன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: காரைக்கால் மாவட்டத்தில், 700 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு, பூத்து சப்பை கட்டும் பருவத்தில் உள்ளது. இந்நிலையில், பருத்தியில் சப்பை உதிராமல் இருக்க 2 சதவீதம் டி.ஏ.பி., தெளிவு நீர்க் கரைசல் (அ) பிளானோபிக்ஸ் 40 பி.பி.எம்., அளவு மருந்து தெளிக்க வேண்டும்.

மேலும், கடந்த வாரம் பெய்த மழை காரணமாக பருத்தி பயிர்களில் வாடல் மற்றும் வேர் அழுகல் நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதைக்கட்டுப்படுத்த, முதலில் பாதிக்கப்பட்ட வயல்களில் தண்ணீரை நன்கு வடித்து விட வேண்டும். பின், 1 சதவீதம் கார்பென்டசிம் மருந்து கரைசலை, 1 லிட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் என்ற அளவில் கலந்து பாதிக்கப்பட்ட செடிகளிலும் மற்றும் அதைச் சுற்றியுள்ள நல்ல செடிகளின் வேர்களிலும் ஊற்றி, மற்ற செடிகளுக்கு நோய் பரவாமல் கட்டுப்படுத்தலாம். மேலும், ஒரு கிலோ டிரைகோடெர்மா விரிடி எதிர் உயிரியை 50 கிலோ மக்கிய தொழு எருவுடம் கலந்து வயலில் இடுவதன் மூலமும், பருத்தி பயிரை பாதுகாக்க முடியும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தடை காலம் நீங்குகிறது 30ம் தேதி முதல் கடலுக்கு செல்ல விசைப்படகு மீனவர்கள் ஆயத்தம்</u>**



**நாகை :** தமிழகத்தில், மீன்களின் இனப்பெருக்க காலத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் ஏப்ரல் 15ம் தேதி முதல் மே 29ம் தேதி வரை விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு சென்று மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டு வருகிறது.

உத்தரவை மீறி கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் விசைப்படகுகள் மற்றும் இழுவைப் படகுகள் மீது தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.அதன்படி, கடந்த ஏப்ரல் 15ம் தேதி முதல் தமிழகத்தில் உள்ள விசைப்படகு கள் மற்றும் இழுவைப்படகுகள் கடலில் மீன்பிடிக்க செல்லவில்லை. கட்டுமரம் மற்றும் பைபர் படகு மீனவர்கள் மட்டும் கரையிலிருந்து 30 கி.மீ. தூரம் வரை சென்று மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மீன்பிடி தடை காலத்தை முன்னிட்டு அரசு மீனவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்குகிறது. மீன்பிடி தடை காரணமாக மீன்பிடி மற்றும் மீன்பிடி தொழில் சார்ந்த 50 ஆயிரம் மீனவர்களுக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த விடுமுறை காலத்தில் மீனவர்கள் தங்கள் படகு, வலை உள்ளிட்ட மீன்பிடி சாதனங்களை பழுது மற்றும் பராமரிப்பு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.இதற்கிடையே, விசைப்படகு மீனவர்கள் வருகிற 30ம் தேதி அதிகாலை முதல் கடலுக்கு மீன்பிடிக்க செல்வதற்கான ஆயத்த பணிகளில் ஈடுபட்டுள்ள னர்.

**<u>கொடைக்கானலில் மலர் கண்காட்சி 25ல் துவக்கம்</u>**



**கொடைக்கானல்** : கொடைக்கானலில் மே 25ல் மலர் கண்காட்சி துவங்குகிறது. இந்த சீசனில் சுற்றுலாப்பயணிகளை குஷிப்படுத்த கோடிக்கணக்கில் கூடுதலாக மலர்கள் பூத்து குலுங்குகின்றன.திண்டுக்கல் மாவட் டம் கொடைக்கானலில் வருகிற மே 25, 26ம் தேதிகளில் மலர் கண்காட்சி நடைபெற உள்ளது. இதற்காக

பிரையன்ட் பூங்காவில் சுமார் 800க்கும் மேற்பட்ட ரகங்களில், சுமார் 1 கோடி மலர்கள் பூத்து குலுங்குகின்றன.

பேன்சி வகையைச் சேர்ந்த சிட்டுக்குருவி வடிவ பூக்கள், ஆன்ட்ரீனம் வகையை சேர்ந்த தவளை தோற்றம் கொண்ட மலர்கள், சிங்கமுக பூக்கள் சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவரும்.

## தேங்காய் பருப்பு ரூ.17 லட்சத்துக்கு ஏலம்



**ஜலகண்டாபுரம்**: சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரத்தில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க கொங்கணாபுரம் கிளை சேவை மையம் செயல்பட்டு வருகிறது.

இங்கு நேற்று நடைபெற்ற ஏலத்தில் விவசாயிகள் 350 மூட்டைகளில் 18,000 கிலோ தேங்காய் பருப்புகளை கொண்டு வந்தனர்.

இந்த வாரம் நடந்த ஏலத்தில், தேங்காய் குறைந்தபட்சமாக கிலோ ரூ.95க்கும், அதிகபட்சமாக கிலோ ரூ.104.50 க்கும் ஏலம் போனது.

இதன் மூலம் நேற்று ரூ.17லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது. சென்ற வாரத்தைவிட இந்த வாரம் சராசரியாக கிலோவுக்கு ரூ.2.25 காசுகள் அதிகம் கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## ஏற்றுமதி ஆர்டர் கிடைக்கவில்லை

## 10,000 டன் சின்ன வெங்காயத்தை உள்ளூர் சந்தையில் விற்க முடிவு



**கோவை:** கோவை மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள எம்.ஜி.ஆர் காய்கறி மார்க்கெட்டுக்கு வெங்காயம் வரத்து அதிகம் உள்ள நாட்களில் 300 டன்னும் வரத்து குறைவான நாட்களில் 100 டன்னும் வரத்து இருக்கும். ஏப்ரல் முதல் ஜுன் வரை சீசன் இல்லாததால் சின்னவெங்காயத்திற்கு கிராக்கி நிலவும். அந்த சமயத்தில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.60 முதல் ரூ.80 வரை விற்கப்படும். கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் சின்னவெங்காயம் வரத்து அதிகமாக இருந்தபோது, ஒரு கிலோ சின்னவெங்காயம் ரூ.15க்கு விற்றது. விலை குறைவாக இருந்ததால், சின்னவெங்காய விவசாயிகள் சுமார் 5000 டன் சின்னவெங்காயத்தை தங்கள் நிலத்தில் பட்டறைகள் அமைத்து சேமித்து வைத்தனர். ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை சின்னவெங்காயத்திற்கு சீசன் முடிவடைந்து தட்டுப்பாடு ஏற்பட்ட போது பட்டறைகளில் சேமித்த வெங்காயத்தை கிலோ ரூ.70 முதல் ரூ.80 வரை விற்றனர். அதேபோல் இந்த வருடமும் ஜனவரி மாத கடைசியில் சின்னவெங்காயம் வரத்து அதிகரித்து ஒரு கிலோ ரூ.12 முதல் ரூ.14க்கு விற்கப்பட்டது. விலை வீழ்ச்சியால், செம்மேடு, ஆலாந்துறை, நரசீபுரம், தொண்டாமுத்தூர், ஜல்லிபட்டி பகுதிகளை சேர்ந்த சின்னவெங்காய விவசாயிகள் 10,000 டன்னுக்கும் மேலாக வெங்காயத்தை பட்டறைகளில் சேமித்து வைத்த னர். ஆனால் கடந்தாண் டுக்கு மாறாக இந்தாண்டு கர்நாடகவில் இருந்து சின்னவெங்காயம் வரத்து அதிகரித்ததால் ஏப்ரல், மே மாதங்களில் சின்னவெங்காயம் விலை உயரவில்லை. ஏற்றுமதி ஆர்டர் கிடைக்காததால் சின்னவெங்காயத்தை ஏற்றுமதி செய்ய முடியவில்லை. இதனால், பட்டறைகளில் வெங்காயத்தை சேமித்து வைத்த அழுகி

விடும் நிலை ஏற்பட்டுள்ளதால், பட்டறைகளை நீக்கி உள்ளூர் சந்தைகளில் வெங்காயத்தை விற்பதற்கு விவசாயிகள் முடிவெடுத்துள்ளனர்.

## 45 நாட்கள் தடை எதிரொலி 45 நாட்கள் தடை எதிரொலி நடுத்தர மீன்கள் விலை 60% உயர்ந்தது வஞ்சிரம் ரூ680, இறால் ரூ430க்கு விற்பனை

**சென்னை,** : மீன்பிடி தடை எதிரொலியாக தமிழகத்தில் நடுத்தர மீன்கள் விலை 60 சதவீதமும், விலை உயர்ந்த மீன்கள் விலை 100 சதவீதமும் விலை உயர்ந்துள்ளது. மீன்கள் இனப்பெருக்கத்துக்காக ஆண்டுதோறும் ஏப்ரல் 15 முதல் மே 29ம் தேதி வரை 45 நாட்கள் மீன்பிடிக்க தடை விதிக்கப்படுகிறது. அதன்படி தமிழகத்தில் தற்போது மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழகம் முழுவதும் 13 கடலோர மாவட்டத்தில் 15 ஆயிரம் விசை படகுகள் மீன்பிடிக்க செல்லவில்லை. பைபர், கட்டுமரங்களில் மட்டும் 20 கிலோ மீட்டர் வரை சென்று மீன் பிடிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு செல்லும் படகுகளில் தற்போது வீசும் சூறைகாற்றால் மீன்கள் குறைந்த அளவிலேயே கிடைத்து வருகிறது. காற்றில் வலைகள் வேறு சேதம் அடைந்து வருகின்றன.

தடை மற்றும் உள்ளூரில் மீன்கள் கிடைக்காததால் கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா, கோவா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு மீன்கள் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்தன. தற்போது இவற்றின் அளவும் வெகுவாக குறைந்துள்ளது. இதன் காரணமாக மீன் விலை மேலும் உயர தொடங்கியுள்ளது.

தடைக்கு முன்னர் வஞ்சிரம் (ஏற்றுமதி செய்யக்கூடியவை) 1 கிலோ ரூ700க்கு விற்கப்பட்டது. இது தற்போது ரூ900க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நடுத்தர வஞ்சிரம் ரூ680லிருந்து ரூ800க்கும், கறுப்பு வவ்வால் ரூ430லிருந்து ரூ600க்கும், இறால்(ஏற்றுமதி செய்யக்கூடியவை) ரூ1000லிருந்து ரூ1400க்கும், நடுத்தர இறால் ரூ430லிருந்து ரூ600க்கும் விற்கப்பட்டு வருகிறது. அதே போல் நண்டு ரூ200லிருந்து ரூ300க்கும், தும்பிலி ரூ80லிருந்து ரூ150க்கும், நெத்திலி ரூ150லிருந்து ரூ200க்கும், வாலை ரூ130லிருந்து ரூ200க்கும், மத்தி ரூ60லிருந்து ரூ100க்கும், கட்லா ரூ100லிருந்து ரூ150க்கும், ரோகு ரூ130லிருந்து ரூ170 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. இந்த விலை ஏற்றம் மீன் பிரியர்களை

அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. உயர்வை தொடர்ந்து சிக்கன், மட்டன் பக்கம் மீன் பிரியர்கள் திரும்ப தொடங்கியுள்ளனர். தடை முடிந்தும் விலை உடனடியாக குறையாது என்றும் கூறப்படுகிறது.

இது குறித்து அகில இந்திய மீனவர் சங்க செய்தி தொடர்பாளர் நாஞ்சில் ரவி கூறியதாவது:

கடற்கரை பகுதியில் தற்போது பலமாக காற்று வீசி வருவதால் பைபர், கட்டுமரங்களில் குறைந்த அளவிலேயே மீன்கள் கிடைத்து வருகின்றன. வெளிமாநிலங்களில் இருந்து வரத்தும் குறைந்துள்ளது. இதனால், விலை உயர்ந்த மீன்கள் விலை 100 சதவீதமும், நடுத்தர மீன்கள் விலை 60 சதவீதமும், சிறிய வகை மீன்கள் விலை 40 சதவீதமும் விலை உயர்ந்துள்ளது.

தடை முடிந்தாலும் உடனடியாக விலை குறைய வாய்ப்பில்லை. தடை முடிந்ததும் மொத்தமாக மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல மாட்டார்கள். அதாவது, முதலில் 50 சதவீத விசை படகுகளும், அடுத்து 10 சதவீத படகுகளும் மீன் பிடிக்க செல்லும். குறைந்த பட்சம் எல்லா படகுகளும் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல 10 நாட்கள் ஆகும். இதனால், மீன் விலை உடனடியாக குறைய வாய்ப்பில்லை. மீன்கள் விலை உயர்வை தடுக்கும் வகையில், தடைக்கு முன்னதாக மீன்களை சேமிக்கும் வகையில் கிடங்குகளை ஏற்படுத்த வேண்டும். தடை காலத்தில் மீனவர்களுக்கு ரூ2,000 உதவி தொகை வழங்கப்படுவது வழக்கம். நாடாளுமன்ற தேர்தலுக்காக, தேர்தல் நடத்தை விதிமுறை அமலில் இருந்ததால் மீனவர்களுக்கு வழங்க வேண்டிய நிவாரண தொகை வழங்கப்படவில்லை. ஆனால், தற்போது தடை நீங்கியும் உதவி தொகை வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. உடனடியாக அதிகாரிகள் இந்த உதவி தொகையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு நாஞ்சில் ரவி கூறினார்.

## ராசிபுரம் கூட்டுறவு சங்கத்தில் 178 மூட்டை பருத்தி ரூ7 லட்சத்திற்கு விற்பனை

**ராசிபுரம்**, : ராசிபுரம் வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில், 178 மூட்டை பருத்தி ரூ7 லட்சத்திற்கு ஏலம் போனது.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் (ஆர்சிஎம்எஸ்.,) சார்பில் ராசிபுரம் அருகே உள்ள கவுண்டம்பாளையம்

குடோனில் பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில், 20 க்கும் மேற்பட்ட வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர்.

புதுப்பாளையம், வடுகம், சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், நாமகிரிப்பேட்டை, மங்களபுரம், திம்மநாய்க்கன்பட்டி, தொப்பப்பட்டி ஜேடர்பாளையம், அத்திபலகானூர், கரடியானூர், கதிராநல்லூர், பட்டணம் கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து விவசாயிகள் 178 மூட்டைகளை கொண்டு வந்து ஏலத்தில் வைத்தனர்.

இந்த ஏலத்தில் டிசிஹெச் ரகம் குறைந்தபட்சமாக ரூ5,900க்கும், அதிகபட்சமாக ரூ6,906 க்கும் விற்பனையானது. ஆர்சிஹெச் ரகம் குறைந்தபட்சமாக தி4,679க்கும், அதிகபட்சமாக 5,550க்கும் ஏலம் போனது. நேற்று 178 மூட்டை பருத்தி ரூ7 லட்சத்திற்கு ஏலம் போனது.

**<u>பரமத்திவேலூரில் மக்காச்சோளம் விலை உயர்வு</u>**

**பரமத்திவேலூர்**, : பரமத்திவேலூரில் மக்காச்சோளம் விலை உயர்ந்துள்ளது. நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா, சோழசிராமணி, சிறுநல்லிக்கோவில், தி.கவுண்டம்பாளையம், கொத்தமங்கலம், ஜேடர்பாளையம், கபிலர்மலை, பெரியசோழிபாளையம், சின்னசோழிபாளையம், அண்ணா நகர், பெரியமருதூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மக்காச் சோளத்தை தனியாகவும், மஞ்சள், கரும்பு போன்ற பயிர்களில் ஊடுபயிராகவும், விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

இங்கு விளையும் மக்காச்சோளம், சாலைப்புதூரில் வாரம்தோறும் திங்கட்கிழமைகளில் செயல்பட்டு வரும் ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு கொண்டு சென்று ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வாரத்தில் 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை மக்காச்சோளம் ரூ1400க்கு விற்பனை ஆனது.

இந்த வாரம் 100 கிலோ கொண்டு ஒரு மூட்டை ரூ1450 க்கு விற்பனையானது. மக்காச்சோளம் விலை உயர்ந்திருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## வட மாநிலங்களில் இருந்து 10 டன் மாதுளை பழம் வரத்து

**சேலம்**, : வட மாநிலங்களில் மாதுளை அமோக விளைச்சலை தந்துள்ளதால், சேலம் கடைவீதிக்கு தினசரி 10 டன் மாதுளை விற்பனை வருகிறது. மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் மாதுளை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக மகாராஷ்டிரா மாநிலம் கோலாப்பூர், சோலாப்பூர் உள்பட பல்வேறு பகுதிகளில் மாதுளைகள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

கடந்த சில நாட்களாக மகாராஷ்டிரா மாநிலத்தில் மாதுளை சீசன் களை கட்டியுள்ளது. அங்கிருந்து இந்தியா முழுவதும் உள்ள வியாபாரிகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களுக்கும் அதிகளவில் மாதுளை விற்பனைக்கு வருகிறது.

இது குறித்து சேலம் கடைவீதி பழ வியாபாரி ஜெயபால் கூறியதாவது: மகாராஷ்டிரா மாநிலத்தில் கணேஷ், எஸ்டிஎல், ஏ ஒன், ஏடூ, கேசர் காபூர் உள்ளிட்ட ரக மாதுளைகள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது மகாராஷ்டிராவில் மாதுளை பழ சீசன் களை கட்டியுள்ளது. இதனால் அங்கிருந்து தினசரி 10 டன் மாதுளை சேலம் கடைவீதிக்கு வருகிறது. இங்கு வரும் மாதுளம் பழத்தை சாலையோர வியாபாரிகள், தள்ளுவண்டி கடைக்காரர்கள், சில்லரை வியாபாரிகள் வாங்கிச்சென்று வியாபாரம் செய்து வருகின்றனர். 10 கிலோ கொண்ட மாதுளம்பழ பெட்டி ரூ500 முதல் ரூ800 என விற்பனை செய்யப்படுகிறது. எங்களிடம் வாங்கிச் செல்லும் சில்லரை வியாபாரிகள் ஒரு கிலோ மாதுளை பழத்தை ரூ50 முதல் ரூ100 என விற்பனை செய்து வருகின்றனர். தற்போது சீசன் களை கட்டியுள்ளதால் விற்பனையும் அமோகமாக நடந்து வருகிறது.

இவ்வாறு பழ வியாபாரி ஜெயபால் கூறினார்.

## சேலம் மார்க்கெட்டுக்கு பலாப்பழம் வரத்து அதிகரிப்பு

**சேலம்**, : கேரளா மற்றும் பண்ருட்டியில் இருந்து சேலம் மார்க்கெட்டுக்கு பலாப்பழம் வரத்து அதிகரித்துள்ளது. ஒரு பலாப்பழம் ரூ50 முதல் ரூ130 வரை விற்பனை செய்யப்படுகிறது.

முக்கனிகளில் ஒன்றான பலா கோடை காலத்தில் அறுவடை சீசன் துவங்கும். தமிழகத்தில் பண்ரூட்டி கொல்லிமலை, கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு ஆகிய பகுதிகளிலும், கேரளாவிலும் பல பகுதிகளில் பலா அறுவடை செய்யப்படுகிறது. கடந்த சில நாட்களாக கேரளா மற்றும் தமிழகத்தில் பல பகுதிகளில் பலாப்பழம் சீசன்களை கட்டியுள்ளதால், பழத்தின் வரத்து அதிகரித்துள்ளது.

இதுகுறித்து சேலம் பலா மொத்த வியாபாரிகள் கூறியதாவது:

தமிழகம் மற்றும் கேரளாவில் பலாப்பழம் சீசன் துவங்கியுள்ளது. சேலம் மார்க்கெட்டுக்கு தினமும் 5 லோடு பலாப்பழம் கொண்டு வரப்படுகிறது. பழத்தின் அளவு பொறுத்து ஒரு பழம் ரூ50 முதல் ரூ130 வரை விற்கப்படுகிறது. மொத்த வியாபாரிகளிடம் வாங்கிச்செல்லும் சில்லரை வியாபாரிகள் பழத்தை ரூ100 முதல் ரூ200க்கு விற்பனை செய்து வருகின்றனர். இந்த சீசன் இன்னும் 15 நாட்களுக்கு இருக்கும். இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

## <u>அடர்தீவன பயன்பாட்டை குறைக்க அசோலாவே தீர்வு</u>

**கிருஷ்ணகிரி**, : அடர்தீவன பயன்பாட்டை குறைக்க அசோலாவே தீர்வு என கிருஷ்ணகிரி அடுத்த எலுமிச்சங்கிரி டாக்டர் பெருமாள் வேளா ண்மை அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் சுந்தர்ராஜ் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

பெருகி வரும் மக்கள் தொகையின் தேவைக்கேற்ப பால், இறைச்சியின் தேவையும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 3 லட்சத்து 45 ஆயிரம் மாடுகள், 4 லட்சத்து 30 ஆயிரம் கறவை மாடுகள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளும், 7 லட்சத்து 20 ஆயிரம் நாட்டுக்கோழிகளும் உள்ளது. இவற்றிற்கு தேவையான பசுந்தீவனம் சாகுபடி செய்யும் நிலங்களின் பரப்பளவும், மேய்ச்சல் நிலங்களின் பரப் பளவும் குறைந்து கொண்டே செல்கிறது. எனவே, அதிக பால் உற்பத்தி மற்றும் இறைச்சிக்காக அடர் தீவனத்தையே அதிக அளவில் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த அடர்தீவனப் பயன்பாட்டினை குறைக்கும் வகையில் குறைந்த செலவு மற்றும் குறைந்த இடவசதியில் உற்பத்தி செய்யப்படும் அசோலாவே இதற்கு சரியான தீர்வாகும்.

அசோலா என்பது நீரில் மிதக்கக்கூடிய சிறிய இலையைக் கொண்ட ஒரு வகை பெரணியாகும். உலர் எடை அடிப்படையில் அசோலாவில் 23-35 சதவீதம் புரதமும், 10-15 சதவீதம் தாது உப்புகளும், 7-10 சதவீதம் அமினோ அமிலங்களும், வளர்ச்சி ஊக்கிப் பொருள்களும் நிறைந்துள்ளது. மேலும் இதில் மாவுச்சத்து, எண்ணெய் சத்துக்கள் அளவு குறைவாக உள்ளது.

எனவே சத்துக்கள் நிறைந்த அசோலாவை கால்நடைகளுக்கும், கோழிகள், வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கும் தீவனமாக அளிக்கலாம். அசோலாவில் அதிக அளவில் புரதச்சத்தும், குறைந்த அளவில் நார்சத்தும் உள்ளதால் மிக எளிதாக செரிமானமாகும். இந்த அசோலாவை அடர் தீவனத்துடன் கலந்தோ அல்லது தனியாகவோ கால்நடைகளுக்கு கொடுக்கலாம். இதை எளிய முறையில், குறைந்த இடவசதியில் உற்பத்தி செய்துகொள்ளலாம்.

பால் மாடுகளுக்கு வழங்கப்படும் தீவனத்தில் அசோலாவை 1:1 என்ற விகிதத்தில் கலந்து கொடுப்பதன் மூலம் பால் உற்பத்தி 15-20 சதவீதம் அதிகரிப்பதுடன், பாலில் கொழுப்பு சத்தின் அளவையும் அதிகரிக்கலாம். கறிக்கோழிகளுக்கு அசோலாவை அப்படியே கொடுக்கலாம். இல்லை எனில் முதல் ஒரு வாரத்திற்கு 1:1 என்ற சதவீதத்தில் கோழித் தீவனத்துடன் கலந்துகொடுக்கலாம். இரண்டு வாரத்திற்கு பிறகு அசோலாவை தனியாகவே கொடுக்கலாம். ஒரு கிலோ அசோலா உற்பத்தி செய்ய 75 பைசா மட்டுமே உற்பத்தி செலவாகிறது. ஒரு கிலோ அசோலா என்பது ஒரு கிலோ புண்ணாக்கிற்கு சமமாகும்.

இத்தகைய சிறப்பு மிக்க அசோலாவை மாடுகள், வெள்ளாடு, செம்மறி ஆடு மற்றும் கோழி வளர்ப்பவர்கள் அனைவரும் வளர்த்து, தீவனமாக பயன்படுத்தி தீவனச் செலவினை குறைத்து, அதிக பால் உற்பத்தி மற்றும் இறைச்சியினை பெற்று அதிக வருமானம் பெறலாம். இவ்வாறு வேளாண்மை அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் சுந்தர்ராஜ் தெரிவித்துள்ளார்.

## மாம்பழங்கள் வரத்து அதிகரிப்புகிலோவுக்கு ரூ.25 வரை விலை சரிவு

**ஈரோடு,** : ஈரோடு மார்க்கெட்டிற்கு மாம்பழம் வரத்து திடீரென்று அதிகரித்துள்ளதால் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் கிலோ ஒன்றுக்கு ரூ.25 வரை விலை சரிந்துள்ளதாக வியாபாரிகள் கூறினர்.

ஈரோடு தினசரி காய்கனி மார்க்கெட்டிற்கு சேலம், கிருஷ்ணகிரி, ஓசூர், திண்டுக்கல், நத்தம், தாளவாடி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மாம்பழம் வரத்து அதிக அளவில் இருந்து வருகின்றது.

பங்கனபள்ளி, செந் தூரம், நடுச்சாலை, இமாம்பசந்த், சேலம் குண்டு, மல்கோவா மற்றும் நாட்டு மாம்பழங்கள் வரத்து அதிக அளவில் உள்ளன. கடந்த வாரம் பங்கனபள்ளி ஒரு கிலோ ரூ.60க்கும், செந்தூரம் ரூ.55க்கும், இமாம்பசந்த் ரூ.80க்கும் விற்பனையானது. ஆனால் இந்த வாரம் திடீரென்று வரத்து அதிகரித்ததால் கிலோ ஒன்றுக்கு சராசரியாக ரூ.25 வரை விலை குறைந்துள்ளது. இதனையடுத்து பங்கனபள்ளி ரூ.30க்கும், செந்தூரம் ரூ.25க்கும், நடுச்சாலை ரூ.20க்கும், இமாம்பசந்த் ரூ.60க்கும், சேலம் குண்டு ரூ.60க்கும், மல்கோவா ரூ.60க்கும் விற்பனையாகி வருவதாக வியாபாரிகள் கூறினர். மாம்பழம் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் மேலும் விலை சரிய வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் கூறினர்.

## <u>மாம்பழங்கள் வரத்து அதிகரிப்புகிலோவுக்கு ரூ.25 வரை விலை சரிவு</u>

**ஈரோடு,** : ஈரோடு மார்க்கெட்டிற்கு மாம்பழம் வரத்து திடீரென்று அதிகரித்துள்ளதால் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் கிலோ ஒன்றுக்கு ரூ.25 வரை விலை சரிந்துள்ளதாக வியாபாரிகள் கூறினர்.

ஈரோடு தினசரி காய்கனி மார்க்கெட்டிற்கு சேலம், கிருஷ்ணகிரி, ஓசூர், திண்டுக்கல், நத்தம், தாளவாடி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மாம்பழம் வரத்து அதிக அளவில் இருந்து வருகின்றது.

பங்கனபள்ளி, செந் தூரம், நடுச்சாலை, இமாம்பசந்த், சேலம் குண்டு, மல்கோவா மற்றும் நாட்டு மாம்பழங்கள் வரத்து அதிக அளவில் உள்ளன. கடந்த வாரம் பங்கனபள்ளி ஒரு கிலோ ரூ.60க்கும், செந்தூரம் ரூ.55க்கும், இமாம்பசந்த் ரூ.80க்கும் விற்பனையானது. ஆனால் இந்த வாரம் திடீரென்று வரத்து அதிகரித்ததால் கிலோ ஒன்றுக்கு சராசரியாக ரூ.25 வரை விலை குறைந்துள்ளது. இதனையடுத்து பங்கனபள்ளி ரூ.30க்கும், செந்தூரம் ரூ.25க்கும், நடுச்சாலை ரூ.20க்கும், இமாம்பசந்த் ரூ.60க்கும், சேலம் குண்டு ரூ.60க்கும், மல்கோவா ரூ.60க்கும் விற்பனையாகி வருவதாக வியாபாரிகள் கூறினர். மாம்பழம் வரத்து

தொடர்ந்து அதிகரித்து வருவதால் மேலும் விலை சரிய வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் கூறினர்.

**தமிழகத்தில் மே, ஜூனில் கத்தரி விலை எவ்வளவு? ஆய்வில் தகவல்**

**திருச்சி,:** மே மாதம் மற்றும் ஜுன் மாதத்தில் விவசாயிகளுக்கு நிலை யான விலையில் கத்தரிக் காய் இருக்கும் என ஆய் வில் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்தியாவில் இருந்து உலகம் முழுவதும் 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கத்தரிக்காயாகவும் ஏற்று மதி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் சேலம், திண் டுக்கல், வேலூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்க ளில் கத்தரி பரவலாக பயி ரிடப்படுகிறது. இவற்றுள் சேலம் மாவட்டம் 12 சத வீத பங்களிப்புடன் முதன் மையாக உள்ளது. பொது வாக கத்தரிக்காய் குளிர் மற்றும் கோடைக்காலங் க ளில் பயிரிடப்படுகிறது. கோவை சந்தைக்கு தொண் டாமுத்து£ர், ஆலந் துறை மற்றும் சூலூர் பகுதி களில் இருந்து மிதமான வரத்து உள்ளது. நடுத்தர தேவை மற்றும் மிதமான வரத்து நிலையான விலைக்கு கார ணமாக உள்ளது. கோவை மொத்த சந்தையில் தற் போது வரி கத்தரிக்காய் கிலோ ரூ.9 முதல் ரூ.12வரை என்ற விலை விவசாயி களுக்கு கிடைக்கிறது.

தற்போது தலைவாசல் மொத்த சந்தைக்கு ஆத் து£ர், கடலூர், மற்றும் பண்ருட்டி ஆகிய பகுதிக ளில் இருந்து குறைவான அளவில் வரிக்கத்தரிக்கா யின் வரத்து உள்ளது. தற் போது கிலோவிற்கு ரூ.9 முதல் ரூ.10 வரை விற்பனை செய்யப்படுகிறது. மேலும் ஒட்டன்சத்திரம் மொத்த சந்தையிலும் வரும் வாரங் களில் வரத்து குறைவாக காணப்படும். தற்போது வரிக் கத்தரிக்காய் கிலோ விற்கு ரூ.10 என்ற பண்ணை விலையில் விற்பனை ஆகி றது.

இது குறித்து திருச்சி வேளாண் சந்தை நுண்ண றிவு மற்றும் வணிக மேம் பாட்டு மைய துணை இயக் குனர் சந்திரசேகரன் கூறு கையில், எதிர் வரும் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தக வல் மற்றும் வணிக ஊக்கு விப்பு மையம் கடந்த 11 வருடங்களில் கோவை, ஒட் டன் சத்திரம் மற்றும் தலை வாசல் மொத்த சந்தைகளில் நிலவிய கத்தரி விலை விப ரங்களை ஆராய்ந்தது. ஆய்வு முடிவுகளின்படி, ஏப்ரல் மற்றும் மே மாதங் களில் கத்தரியின் பண்ணை

விலையானது கிலோவுக்கு ரூ.10முதல் ரூ.12வரை என கோவை மற்றும் தலைவாசல் மொத்த சந்தையில் இருக்கும். மேலும் ஜுன் மாதத்தில் கோவை மற்றும் தலைவசால் மொத்த சந் தையில் ரூ.1 அல்லது ரூ.2 வரை விலை உயர வாய்ப்பு உள்ளது. மே மற்றும் ஜுன் மாதங் களில் ரூ.1 அல்லது 2 வரை குறைந்து காணப் படும் என கணக்கிடப்பட் டுள்ளது என்றார்.

## அதிக மகசூல் பெற தென்னைக்கு உரமிடும் வழிமுறை

**சேதுபாவாசத்திரம்**, : தென்னையில் அதிக மகசூல் பெற நாட்டு ரக (நெட்டை ரகம்) தென்னைகளுக்கு நடவு செய்தது முதல் ஒரு வருட கன்று ஒன்றுக்கு தொழு உரம் 10 கிலோ, யூரியா 325 கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 500கிராம், வேப்பம்புண்ணாக்கு 1.500கிலோவும் இட வேண்டும். .

இரண்டு வருட கன்று ஒன்றுக்கு தொழு உரம் 20 கிலோ, யூரியா 650 கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 1கிலோ, வேப்பம்புண்ணாக்கு 2.500கி லோவும், மூன்று வருட கன்று ஒன்றுக்கு தொழு உரம் 30கிலோ, யூரியா 975கிராம், சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 1.500கிலோ, வேப்பம்புண்ணாக்கு 3.750கி லோவும், நான்கு வருட கன்று ஒன்றுக்கு தொழு உரம் 40கிலோ, யூரியா 1.300கிலோ, சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 2கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5கிலோவும், ஐந்து வருட கன்று ஒன்றுக்கு தொழு உரம் 50கிலோ, யூரியா 1.300கிலோ, சூப்பர் மற்றும் பொட்டாஷ் தலா 2கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5கிலோவும் இட வேண்டும். வீரிய ஒட்டு ரக தென்னைகளுக்கு ஒரு வருட கன்று ஒன்றுக்கு தொழு உரம் 15கிலோ, யூரியா 500கிராம், சூப்பர் 375 கிராம், பொட்டாஷ் 750 கிராம், வேப்பம் புண் ணாக்கு 1.500 கிலோவும், இரண்டு வருட கன்று ஒன்றுக்கு தொழு உரம் 30 கிலோ, யூரியா 1கிலோ, சூப்பர் 750 கிராம், பொட்டாஷ் 1.500 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 2.500கிலோவும், மூன்று வருட கன்று ஒன்றுக்கு தொழு உரம் 45கிலோ, யூரியா 1.500கிலோ, சூப்பர் 1.150கிலோ, பொட்டாஷ் 2.250கிலோ, வேப்பம்புண்ணாக்கு 3.750கி லோவும், நான்கு வருடம் மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மரம் ஒன்றுக்கு தொழு உரம் 60கிலோ, யூரியா 2.250கிலோ, சூப்பர் 1.500கிலோ, பொட்டாஷ் 3கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5கிலோவும் இட வேண்டும். மேற்கண்ட உர பரிந்துரை அளவினை சம பங்காக பிரித்து வருடத்தில் இரு முறை இட வேண்டும். இவ்வகை உரங்களை மரத்தைச் சுற்றி 5 அடி தூரத்தில்

இட்டு மண்ணை கிளறி விட்டு உடனடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். முறையாக உரமிடும் பட்சத்தில் குரும்பை உதிர்தல், ஒல்லிக்காய், காய்களில் வெடிப்பு, நீள வடிவிலான வெற்றுகாய்கள் ஆகிய பிரச்னைகள் குறைந்து ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 150 முதல் 200 தேங்காய்கள் வரை கண்டிப்பாக மகசூல் பெற முடியும். இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>சந்தைகளில் தக்காளி விலை கிலோவுக்கு ரூ.25 முதல் ரூ.30 வரை உயரும்</u>**



**ஈரோடு,**

உலக அளவில் பயிரிடப்படும் காய்கறிகளில் தக்காளி முதன்மையானதாக விளங்குகிறது. தக்காளியில் அதிக அளவில் வைட்டமின்கள், தாதுக்கள், நார்ச்சத்துகள் மற்றும் அமினோ அமிலங்கள் உள்ளன.

<u>தக்காளி சாகுபடி</u>

இந்தியாவில் தக்காளி குளிர்கால மற்றும் கோடைகால பயிராக பயிரிடப்படுகிறது. குறிப்பாக தமிழகத்தில் ஆடிப்பட்டம், கார்த்திகை பட்டம் மற்றும்

தைப்பட்டங்களில் தக்காளி பரவலாக பயிரிடப்படுகிறது. தை மற்றும் மாசி மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. இதே சமயத்தில் ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களில் தக்காளி அறுவடை செய்யப்படுகிறது.

இதனால் மைசூர், ஆந்திரா ஆகிய இடங்களில் இருந்து கோவை, ஒட்டன்சத்திரம் போன்ற சந்தைகளுக்கு தக்காளி வரத்து அதிகரிப்பதால், தமிழகத்தில் பண்ணை விலை குறைகிறது. தற்போது கோவை சந்தைகளுக்கு கிணத்துக்கடவு, நாச்சிபாளையம், தொண்டாமுத்தூர் ஆகிய பகுதிகளில் இருந்து, தக்காளி குறைந்த அளவே வரத்து காணப்படுகிறது.

<u>வெளிமாநில வரத்து</u>

தற்போது கர்நாடகா மாநிலத்தில் இருந்தும் கோவை சந்தைகளுக்கு தக்காளி வரத்து உள்ளது. இவ்வாறு வெளி மாநிலங்களில் இருந்து அதிக அளவில் வரத்து, உள்ளூர்களில் குறைந்த அளவு வரத்து போன்ற காரணத்தால், கடந்த மாதத்தை விட, தற்போது கிலோவுக்கு ரூ.2 முதல் ரூ.3 வரை உயர்ந்து, தற்போது கிலோ ரூ.6 முதல் ரூ.8 வரை விற்பனை செய்யப்படுகிறது.

தலைவாசல் மொத்த சந்தைக்கு ஆத்தூர், கடலூர், பண்ருட்டி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் இருந்து, மிதமான வரத்தே உள்ளது. தற்போது தக்காளிக்கு பண்ணை விலையாக ரூ.6 முதல் ரூ.8 வரை கிடைக்கிறது. ஓசூர் சந்தையிலும், பெங்களூர் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் இருந்தும் வரத்து உள்ளது.

<u>கோவை சந்தைகள்</u>

இந்தநிலையில் வரும் காலங்களில் தக்காளி விலை நிலவரங்களை அறிந்து கொள்ள, விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். இதற்காக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் கோவை, தலைவாசல் மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய மொத்த சந்தைகளில் கடந்த 11 ஆண்டுகளாக நிலவிய விலை நிலவரங்களை ஆய்வு செய்தது.

வறட்சி மற்றும் மழையின்மை காரணமாக, தக்காளி சாகுபடி பரப்பளவு கோவை, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில், முந்தைய சாகுபடி

பரப்பளவை விட சற்று குறைந்து காணப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் செய்யப்பட்ட, விலை ஆய்வுகளின் படி, ஏப்ரல் மாதத்தில் தக்காளி விலை கிலோவுக்கு ரூ.10 முதல் ரூ.12 வரை இருக்கும்.

விலை உயரும்

கடந்த ஆண்டு மே மாதத்தில் இருந்து தக்காளி விலை உயர தொடங்கியது. இதன்படி இந்த ஆண்டும் தக்காளி விலை உயர உள்ளது. இதனால் கோவை சந்தைகளில் வரும் மாதங்களில் தக்காளி விலை கிலோவுக்கு ரூ.25 முதல் ரூ.30 வரை உயரும். ஒட்டன்சத்திரம் சந்தையில் தக்காளி கிலோவுக்கு ரூ.22 ஆக இருக்கும். ஓசூர் மற்றும் தலைவாசல் சந்தைகளில் ரூ.20 ஆக இருக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தகவல்: **தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை.**

## 2 மாதங்களுக்கு விலை உயர வாய்ப்பில்லை: அறுவடை செய்த உருளைக்கிழங்கை உடனே விற்பது நல்லது



**ஈரோடு,**

கிழங்கு வகை பயிர்களில் முதன்மை பயிராக, உலக அளவில் 150 நாடுகளில் உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டு வருகிறது. 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் உருளைக்கிழங்கை உணவாக உட்கொண்டு வருகிறார்கள். இந்தியாவில் கடந்த

2012–13–ம் ஆண்டு 19.65 லட்சம் எக்டேரில், 447 லட்சம் டன்கள் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது.

<u>உருளைக்கிழங்கு சாகுபடி</u>

இந்தியாவில் உத்தரபிரதேசம், மேற்கு வங்காளம், பீகார் ஆகிய மாநிலங்களில் 85 சதவீத பரப்பளவில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்பட்டு, 89 சதவீதம் உற்பத்தி செய்யப்படுகிறது. தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிலையத்தின் கணக்கீட்டின்படி, கடந்த 2012–13–ம் ஆண்டு, தமிழ்நாட்டில் 4,860 எக்டேர் நிலப்பரப்பில், 97,100 டன்கள் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் கடந்த ஆண்டை காட்டிலும், உருளைக்கிழங்கு சாகுபடி பரப்பளவில் 1 சதவீதமும், உற்பத்தியில் 7 சதவீதமும் குறைந்துள்ளது. நீலகிரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட்டங்களின் மலைப்பிரதேசங்களில், உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டு உள்ளது. பிப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் குறைந்த அளவே வரத்து உள்ளது.

<u>நல்ல விலை கிடைக்கிறது</u>

இதனால் தமிழக விவசாயிகள் தங்களுக்கு தேவையான உருளைக்கிழங்கை உத்தரபிரதேசத்தில் உள்ள ஆக்ரா, ஹசாந்பூர், மத்தியபிரதேசத்தில் உள்ள இந்தூர், கர்நாடகாவில் உள்ள கோலார் ஆகிய சந்தைகளில் இருந்து கொள்முதல் செய்து வருகிறார்கள். அதிக உற்பத்தி செலவு, தண்ணீர் பற்றாக்குறை, வேலை ஆட்கள் பற்றாக்குறை மற்றும் வெளி மாநிலங்களின் வரத்தால் விலை வீழ்ச்சி ஆகிய காரணங்களால், விவசாயிகள், மலைப்பிரதேச காய்கறி சாகுபடிக்கு மாறி வருகிறார்கள்.

நீலகிரி உருளைக்கிழங்கு சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம், வேலூர் ஆகிய இடங்களுக்கும், வெளி மாநிலங்களில் உள்ள சந்தைகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. நீலகிரியில் விளையும் உருளைக்கிழங்கு, உயர்ந்த தரம் கொண்டது என்பதால், மற்ற மாநில உருளைக்கிழங்கை விட, இதற்கு நல்ல விலை கிடைக்கிறது.

<u>விலை உயர வாய்ப்பு இல்லை</u>

நீலகிரி விவசாயிகள், பிப்ரவரி மாதத்தில் நீர்போகத்தில் விதைத்த உருளைக்கிழங்குக்கு, அறுவடை சமயமான மே மற்றும் ஜூன் மாதங்களில் என்ன விலை கிடைக்கும்? என்று அறிந்து கொள்ள ஆர்வமாக உள்ளனர். இதற்காக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம், மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில், கடந்த 23 ஆண்டுகளாக நிலவிய உருளைக்கிழங்கு விலை நிலவரங்களை ஆய்வு செய்தது.

இதன்படி, நல்ல தரமான நீர்போக உருளைக்கிழங்குக்கு அறுவடை சமயத்தில் கிலோவுக்கு ரூ.20 முதல் ரூ.25 வரை கிடைக்கும் என்று தெரியவந்து உள்ளது. வருகிற 2 மாதங்களுக்கு விலை உயர வாய்ப்பு இல்லை என்பதால், விவசாயிகள் அறுவடை செய்த உருளைக்கிழங்கை உடனே விற்பது நல்லது. பொதுமக்கள், மஞ்சள் நிற தோலுடன், கடினத்தன்மையுடன் இருக்கும் நீலகிரி உருளைக்கிழங்கை கண்டறிந்து வாங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தகவல்: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை.**

**<u>சொட்டுநீர் பாசனம் மூலம் தர்பூசணி சாகுபடி</u>**



**கோபிசெட்டிபாளையம்,**

கடுமையான வறட்சியால் சொட்டுநீர் பாசனம் மூலம் தர்பூசணி சாகுபடி செய்யப்படுகிறது.

தர்பூசணி

கோபிசெட்டிபாளையம் சுற்றுவட்டார பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் தடப்பள்ளி-அரக்கன்கோட்டை, கீழ்பவானி வாய்க்கால்கள் மூலம் பாசன வசதி பெறுகிறது. இந்த பாசன பகுதியில் நெல், வாழை, கரும்பு, மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்வது வழக்கம். மேலும் கத்திரிக்காய், முள்ளங்கி, தர்பூசணி போன்ற பயிர்களையும் விவசாயிகள் சாகுபடி செய்வார்கள்.

கோபிசெட்டிபாளையம், கடுக்காம்பாளையம், பொலவக்காளிப்பாளையம், கலிங்கியம், குருமந்தூர் உள்பட பல்வேறு பகுதிகளில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தர்பூசணி சாகுபடி செய்யப்பட்டது. ஆனால் கடந்த 2 ஆண்டுகளில் ஏற்பட்டு உள்ள கடுமையான வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டு உள்ளது. தற்போது சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பில் மட்டுமே தர்பூசணி பயிரிடப்பட்டு உள்ளது.

சொட்டு நீர் பாசனம்

தண்ணீர் தட்டுப்பாட்டை சமாளிக்கும் வகையில் விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் மூலம் தர்பூசணி சாகுபடியில் ஈடுபடுகிறார்கள். இதனால் குறைவான தண்ணீரில் மகசூல் பெறமுடியும்.

இதுகுறித்து தர்பூசணி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கூறும்போது, “கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு கோடை காலங்களில் ஏராளமான விவசாயிகள் தர்பூசணியை ஆர்வமாக பயிரிட்டனர். ஆனால் வறட்சி காரணமாக தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது. எனவே விவசாயிகள் ஆழ்துளை கிணற்று பாசனத்தை பயன்படுத்தி விவசாயம் செய்து வருகிறார்கள். மேலும், மழை பெய்யாததால் மகசூல் குறைந்து உள்ளது. தண்ணீர் தட்டுப்பாட்டை சமாளிக்கும் வகையில் சொட்டு நீர் பாசனம் மூலம் தர்பூசணியை பயிரிட்டு உள்ளோம்.“, என்றனர்.

<u>பொள்ளாச்சி சந்தைக்கு மாடுகள் வரத்து அதிகரிப்பு</u>



**பொள்ளாச்சி,**

ஜல்லிக்கட்டு, ரேக்ளா போட்டிகள் நடத்த தடை விதிக்கப்பட்டு உள்ளதால் பொள்ளாச்சி சந்தைக்கு மாடுகள் வரத்து அதிகரித்தது. இதில் 750 காளைகள் குறைந்த விலைக்கு விற்பனைக்கு வந்தன.

மாட்டு சந்தை

பொள்ளாச்சியில் மாட்டு சந்தை வாரத்தில் வியாழக் கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகிய 2 நாட்கள் நடைபெறும். சந்தைக்கு ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டின் பல் வேறு பகுதிகளில் இருந்துமாடு கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன.

இங்கு வரும் மாடுகளை உள்ளூர் விவசாயிகள், வியா பாரிகளும் வாங்குகின்றனர். இதை தவிர கேரளாவுக்கும் கொண்டு செல்லப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை என்பதால் மாட்டு சந்தை நடைபெற்றது. சந்தைக்கு மாடுகள் வரத்து அதிகரித்து காணப்பட்டது. சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற் பட்ட மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன.

தமிழர்களின் பாரம் பரிய மான விளையாட்டான ஜல்லிக் கட்டு, ரேக்ளா பந்தயங் கள் நடத்த சுப்ரீம் கோர்ட்டு தடைவிதித்தது. இதனால் பந்தய காளைகளை காப்பாற்ற முடியாததால் பொள்ளாச்சி சந்தைக்கு நேற்று குறைந்த விலைக்கு விற்பனைக்கு கொண்டு வந்தனர். 25 ஜோடி கொண்ட 50 ரேக்ளா காளை கள்

மற்றும் காங்கயம் காளை கள் உட்பட 750 காளைகள் நேற்று விற்பனைக்கு வந்தன.

பந்தய காளைகள்

இதுகுறித்து மாட்டு சந்தை வியாபாரி ஒருவர் கூறிய தாவது:-

பொள்ளாச்சி தேர்தல் நடத்தை விதிகளால் சந்தைக்கு வரும் வியாபாரிகளின் எண் ணிக்கை குறைந்து இருந்தது. தற்போது அந்த விதிகள் தளர்த்தப்பட்டு உள்ளதால் வியாபாரிகள் மாடுகளை வாங்க ஆர்வமுடன் வந்தனர். மேலும் ரேக்ளா, ஜல்லிக் கட்டுக்கு தடை விதிக்கப்பட்டு இருப்பதால் காங்கயம் காளைகள் மிகவும் குறைந்த விலைக்கு வந்தன. மாடுகளை வைத்து காப்பாற்ற முடியாத தால் விற்பனைக்கு கொண்டு வந்ததாக விவசாயிகள் கூறி னார்கள். அதிகபட்சமாக 150 கிலோ கொண்ட காளை மாடு ரூ.25 ஆயிரம் வரை விற்பனை ஆனது. கன்றுகுட்டி ரூ.3ஆயி ரத்தில் இருந்து ரூ56 ஆயிரம் வரையும். பசு மாடு ரூ.25 ஆயிரத்தில் இருந்து ரூ.30 ஆயிரம் வரையும் வியா பாரிகள் வாங்கி சென்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

**<u>சீர்காழி தாலுகாவில் முதல்முறையாக எந்திரம் மூலம் கரும்பு அறுவடை</u>**



சீர்காழியை அடுத்த உமையாள்பதி கிராமத்தில் பயிரிடப்பட்டிருந்த கரும்புகள் எந்திரத்தின் உதவியுடன் அறுவடை செய்யப்பட்ட போது எடுத்த படம்.

சீர்காழி தாலுகாவில் முதல் முறையாக எந்திரம் மூலம் கரும்பு அறுவடை நடைபெற்றது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கோரிக்கை மனு

சீர்காழி பகுதியில் பயிரிப்பட்டிருந்த கரும்பு சாகுபடி முதன்முறையாக எந்திரம் மூலம் அறுவடைசெய்யும் பணி நடைபெற்றது. இதனால் வரும் காலங்களில் இந்த பகுதியில் கூடுதலாக கரும்பு சாகுபடி செய்யபடும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

சீர்காழி தாலுகாவில் கடவாசல், வடகால், பாதரக்குடி, அரசூர், கூத்தியம்பேட்டை, மணலகரம், காப்பியக்குடி உள்ளிட்ட 80-க்கும் மேற்பட்ட கிராமங்களில் 4 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கடந்த காலங்களில் கரும்பு சாகுபடி செய்யபட்டுவந்தது. விவசாயிகள் பல்வேறு இன்னல்களுக்கு இடையே கடன்பெற்று கரும்பு சாகுபடி செய்தாலும், அதனை அறுவடை செய்யும் காலங்களில் போதிய ஆட்கள் பற்றாக்குறையால் பெரும் பாதிப்படைந்து வந்தனர். நாளடைவில் மேற்கண்ட பகுதியில் 500 முதல் 600 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே கரும்பு சாகுபடி செய்யும் நிலை உள்ளது. இந்த நிலையில் சீர்காழி கோட்ட கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் தலைஞாயிறு நடிப்பிசை புலவர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குனரிடம் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த கோரிக்கையை பரிசீலித்த ஆலை மேலாண்மை இயக்குனர் நடப்பு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட கரும்புகள் எந்திரம் மூலம் அறுவடை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

## கரும்பு அறுவடை

இதன் மூலம் சீர்காழி கோட்டத்துக்கு உட்பட்ட கூத்தியம்பேட்டையில் பயிரிடப்பட்டிருந்த 15 ஏக்கர் கரும்பும், உமையாள்பதி கிராமத்தில் பயிரிடபட்டிருந்த 22 ஏக்கர் கரும்பும் விவசாயிகளின் வேண்டுகோளின்படி எந்திரம் மூலம் அறுவடை செய்யப்பட்டது. எந்திரம் மூலம் கரும்பு அறுவடை செய்வதால் விவசாயிகளுக்கு பணம் சேமிப்பு ஆவதுடன், நேரமும் மிச்சமாகிறது. இது குறித்து உமையாள்பதி விவசாயி ரவிச்சந்திரன் கூறுகையில்,

கடந்த முறை நான் 5 ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்திருந்தேன். ஆட்கள் 100 நாள் வேலை திட்டத்திற்கு சென்று விடுவதால அறுவடை நேரத்தில் ஆட்கள் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டேன். இதனால் இனிவரும் காலங்களில் கரும்பு சாகுபடி

செயவதில்லை என தீர்மானித்திருந்தேன். இந்த நேரத்தில் தலைஞாயிறு கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலம் எந்திரம் வாயிலாக கரும்பு அறுவடை செய்யமுடியம் என்பதை அறிந்து, அதன் மூலம் தற்போது எனது வயலில் பயிரிட்டிருந்த கரும்புகளை அறுவடை செய்தேன். ஆட்கள் கொண்டு கரும்பு அறுவடை செய்ய 1 டன்னுக்கு 2 ஆட்கள் வைத்து அறுவடை செய்ய ரூ. ஆயிரத்து 400 வரை செலவானது. தற்போது எந்திரம் பயன்படுத்தி அறுவடை செய்ய 1 டன்னுக்கு ரூ.550 முதல் 600 மட்டுமே செலவாகிறது. மணிக்கு 100 டன் வரை அறுவடை செய்ய முடிகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## கொடைக்கானலில் கோடைவிழா மலர்க் கண்காட்சி 25–ந்தேதி தொடக்கம் முன்னேற்பாடு பணிகள் தீவிரம்



**கொடைக்கானல்,**

கொடைக்கானலில் 25–ந்தேதி கோடைவிழா மலர்க் கண்காட்சி தொடங்குகிறது. இதையொட்டி முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

மலர் கண்காட்சி

மலைகளின் இளவரசி என்று அழைக்கப்படும் கொடைக்கானலில் குளு, குளு சீசன் நிலவி வருகிறது. தற்போது கோடை விடுமுறை என்பதால், இந்த சீசனை அனுபவிக்க தமிழகம் முழுவதும் இருந்து குடும்பம் குடும்பமாக ஏராளமானோர்

வருகை தருகிறார்கள். இதனால், கொடைக்கானலுக்கு வாகனங்கள் படை எடுத்த வண்ணம் உள்ளன.

இந்த நிலையில் கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில், வருகிற 25–ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) கோடை விழா தொடங்க உள்ளது. தொடக்க நிகழ்ச்சிகளாக முதல் 2 நாட்களுக்கு மலர்க் கண்காட்சி நடக்கிறது. இது 53–வது மலர் கண்காட்சியாகும்.

முன்னேற்பாடு பணிகள்

இந்த கண்காட்சியையொட்டி தனியார் சார்பில் 40 அரங்குகளும், அரசு துறைகளின் சார்பில் 14 அரங்குகளும் அமைக்கப்பட உள்ளன. இந்த அரங்குகள் திண்டுக்கல், மதுரை, தேனி உள்பட 4 மாவட்ட தோட்டக்கலைத்துறை சார்பில் அந்தந்த மாவட்டத்தின் முக்கிய நிகழ்வுகளை கொண்டு அமைக்கப்பட உள்ளன.

பிரையண்ட் பூங்காவில் நடக்க உள்ள 53–வது மலர்க் கண்காட்சியையொட்டி 1 கோடிக்கும் மேற்பட்ட பூக்கள் காட்சிக்காக வைக்கப்பட உள்ளன. இதில் பழங்கள், காய்கறிகளும் இடம்பெற இருக்கின்றன. இதற்கான பணிகள் தற்போது தீவிரமாக நடந்து வருகிறது.

தினசரி நிகழ்ச்சிகள்

மலர்க் கண்காட்சியின் தொடக்க விழாவில், அமைச்சர்கள் கலந்து கொள்ள உள்ளனர். 2 நாட்களின் முடிவில் சிறந்த படைப்புகளுக்காக பரிசுகள் மற்றும் கோப்பைகள் வழங்கப்பட உள்ளன.

10 நாட்கள் நடக்கும் கோடை விழாவினையொட்டி தினசரி கலை நிகழ்ச்சிகள், விளையாட்டு போட்டிகள், படகு போட்டி, வாத்து பிடிக்கும் போட்டி உள்ளிட்டவைகளும் நடத்தப்பட இருக்கின்றன.

சிறந்த படைப்புகள் தேர்வு

தோட்டக்கலை துறையினரிடம் பதிவு செய்திருந்த தனியார் பங்களாக்கள் மற்றும் வீடுகளில் அமைக்கப்பட்டிருந்த புல்தரைகள், ரோஜா தோட்டங்கள், மலர்

பாத்திகள் ஆகியவற்றில் சிறந்த படைப்புகள் தேர்வு செய்யும் நிகழ்ச்சி கடந்த ஒரு வார காலமாக நடந்தது. இதில் தோட்டக்கலை துறை அதிகாரிகள் நடுவர்களாக செயல்பட்டு சிறந்த படைப்புகளை தேர்வு செய்தனர்.

தற்போது கொடைக்கானலில் சிறப்பான சீசன் நிலவி வருகிறது. கடந்த 2 நாட்களாக மிதமான வெப்பம் நிலவி வந்த நிலையில், நேற்று மதியம் 1.30 மணி முதல் 2 மணி வரை சாரல் மழை பெய்தது. இதனால், சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.